E Paper

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்
2022 ஜுலை 2 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்
1932 - 2022

வரு. 90 இல. 154 | Saturday 02,July, 2022 | 11 பக்கங்கள்

## ஏஞ்சலோ மெத்யூஸுக்கு கொரோனா தொற்று



இலங்கை கிரிக்கெட் அணியின் சகலதுறை ஆட்டக்காரர் ஏஞ்சலோ மெத்யூஸுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

அவருக்கு மேற்கொள்ளப்பட்ட ரெப்பிட் அன்டிஜன் 06

IMF உடனான வேலைத்திட்டம், அபிவிருத்தி

## இலங்கைக்கு ஜப்பான் ஒத்துழைப்பு வழங்குமென தூதுவர் தெரிவிப்பு



சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டம் மற்றும் இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தி தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்குவதாக ஜப்பான் தூதுவர் ஹிடேக்கி மிசுகோஷி (Hideaki Mizukoshi) தெரிவித்துள்ளார்.

கொழும்பு, கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் 06

## பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட 32 இலட்சம் குடும்பங்களுக்கு நிவாரணம்

WB, ADB நிதிப் பங்களிப்புடன் 06 மாதங்கள் வழங்க அரசு தீர்மானம்

அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள 32 இலட்சம் குடும்பங்களுக்கு நிவாரணங்களை பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் முதல் அதற்கான செயற் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் ஒரு குடும்பத்திற்கு 7,500 ரூபா வீதம் நிதி வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் 06

எரிசக்தி ஒத்துழைப்பை பெறும் நோக்கில்

## ஜனாதிபதியின் விசேட தூதுவராக அமைச்சர் நஸீர் இன்று சவூதி பயணம்



சவூதி அரேபியாவுடனான எரிசக்தி ஒத்துழைப்பை மிகவும் அவசரமான விடயமாகக் கருதி, இன்று 02ஆம் திகதி முதல் 05 வரை ஜனாதிபதியின் விசேட தூதுவராக சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் சவூதி அரேபியாவுக்கு விஜயம் செய்வதற்கு வசதிகளை வழங்குமாறு வெளிநாட்டமைச்சர் பீரிஸ், சவூதி அரேபியத் தூதரகத்தின் பொறுப்பாளர் அப்துல்லா ஏ. ஓர்கோபிக்கு கோரிக்கை விடுத்துள்ளார். சவூதி அரேபியத் தூதரகத்தின் பொறுப்பாளர் 06

28 ஆம் திகதிக்கு முன் பஸ் கட்டணம் அதிகரிக்க வேண்டுமென

## அரசுக்கு அழுத்தம் கொடுத்த சங்கம் நியாயமற்றதென கூறுவது வேடிக்கை

தே.போ ஆணைக்குழு பணிப்பாளர் நாயகம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

"யாப்பில் உட்படுத்தப்பட்ட பரிந்துரைக்கமையவே பஸ் கட்டணத்தில் திருத்தம் செய்யப்பட்டது"



எரிபொருள் விலை கடந்த 26 ஆம் திகதி நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டதோடு 28 ஆம் திகதி மதியம் 12 மணி முதல் பஸ் சேவைகளை நிறுத்தப்போவதாக தெரிவித்த பஸ் சங்கமொன்று வருடாந்த பஸ் கட்டண திருத்தத்தை மேற்கொண்டதன் பின்னர் அது நியாயமற்றதென தெரிவித்திருப்பது வேடிக்கையானதென தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி நிலான் மிராண்டா தெரிவித்தார்.

2001 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்ட பஸ் கட்டண அதிகரிப்பு தேசிய கொள்கைக்கிணங்க இந்த வருடத்திற்குரிய வருடாந்த பஸ் கட்டணத்திருத்தம் நேற்று முதலாம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆகக் குறைந்த பஸ் கட்டணம் 40 ரூபாவாகவும் ஏனைய கட்டணங்கள் 22 வீதத்தாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. யாப்பில் உட்படுத்தப்பட்டுள்ள பரிந்துரைக்கமையவே இந்த கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போது தேசிய போக்குவரத்து திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ் கட்டணங்கள் 22 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க 32 ரூபாவாக இருந்த ஆகக்குறைந்த கட்டணம் 40 ரூபாவாக 06

## மாணவர்களை ஏற்றி சென்ற லொறி விபத்து

**லோரன்ஸ் செல்வநாயகம், மடுல்சீமை நிருபர்**

### 13 பேர் காயம்

### கலன்பிந்துனுவெவவில் சம்பவம்

கலன்பிந்துனுவெவ பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றுள்ள விபத்து ஒன்றில் 13 பாடசாலை மாணவர்கள் காயமடைந்து ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது.

போக்குவரத்து வசதிகள் இல்லாத காரணத்தால் லொறியொன்றில் பயணித்துள்ள பாடசாலை மாணவர்களே லொறியின் பின்பக்க கதவு உடைந்து விழுந்ததில் விபத்துக்குள்ளாகியதாக பொலிஸார் தெரிவித்தனர்.





## நேற்று காலை ஆரம்பித்த ரயில்வே வேலை நிறுத்தம் மாலையில் நிறைவு

அநேக சேவைகள் இரத்து



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ரயில் சாரதிகள் மற்றும் கட்டுப்பாட்டாளர்கள் ஆரம்பித்த வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று மாலை கைவிடப்பட்டுள்ளது. அதனையடுத்து வழமை போன்று ரயில் சேவைகள் நடைபெறுவதாக ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அத்துடன் ரயில் சேவைகளை தொடர்ந்தும் வழமை போன்று முன்னெடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் 06

மாத்தறை, வவுனியா, கண்டியில்

## கடவுச்சீட்டு ஒரே நாள் சேவை திங்கள் முதல் ஆரம்பம்



மாத்தறை, வவுனியா மற்றும் கண்டி ஆகிய பிரதேசங்களில் ஒரே நாளில் கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளும் நிலையங்களை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் திறக்கவுள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர், 06

கந்தக்காடு புனர்வாழ்வு நிலைய சம்பவம்:

## மனித உரிமை ஆணைக்குழு விசாரணைகளுக்காக விரைவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் நேற்று அங்கு சென்றுள்ளதாகவும் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை உடனடியாக ஆரம்பித்துள்ளதாகவும் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆணைக்குழுவின் தலைவி ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ரோஹினி மாரசிங்க, அது தொடர்பில் நேற்று தெரிவிக்கையில், 06

இந்திய வீசா விண்ணப்பம்:

## செவ்வாய், புதன் வியாழன் தினங்களில் மட்டுமே ஏற்பு



இந்தியாவுக்கான வீசா பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் தினங்கள் தொடர்பாக இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்தல் விடுத்துள்ளது.

இதன்படி எதிர்வரும் 04 ஆம் திகதி திங்கள் முதல் புதிய நடைமுறை அமுல் படுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விசா விண்ணப்ப முகவர் நிலையம் IVS வாரத்தில் மூன்று நாட்கள் மாத்திரமே விசா விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுமென்றும் உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 04 ஆம் திகதி முதல் செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை ஆகிய நாட்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

அத்துடன் 04ஆம் திகதி திங்கட்கிழமையும் எந்த விதமான முன்பதிவுகளும் ஏற்றுக்கொள்ளப்பட 06

## சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்குமாறு மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்கு கடிதம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அனைத்து கட்சிகளின் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தி சர்வ கட்சி அரசாங்கத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடித மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அஸ்கிரிய, மல்வத்து, அமரபுர மற்றும் ராமான்ய பீடங்களின் மகாநாயக்க தேரர்களே ஜனாதிபதிக்கு நேற்று அது தொடர்பில் கடிதமொன்றை அனுப்பியுள்ளனர்.

அனைத்துக் கட்சிகளின் தலைவர்களை மீண்டும் அழைத்து சர்வ கட்சி அரசாங்கத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு 06

## அரச அச்சக கூட்டுத்தாபனத்தில் நவீன அச்சு இயந்திரம்

செயற்பாடுகள் 4ஆம் திகதி ஆரம்பம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்க அச்சகக்கூட்டுத்தாபனம் அரசாங்கத்தின் அனுசரணையுடன் புதிய நான்கு வர்ண நவீன அச்சு இயந்திரமொன்றை கொள்வனவு செய்துள்ளது. அதன் மூலமான உற்பத்தி நடவடிக்கைகள் எதிர்வரும் ஜூலை 04 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்கவின் தலைமையில் அன்றைய தினம் முற்பகல் 06

அத்தியாவசிய உணவு, மருந்து விநியோகம்;

## யாழ். - கொழும்பு சரக்கு ரயில் சேவையை பயன்படுத்த உதவுமாறு கோரிக்கை





அங்கஜன் M.P அமைச்சர் பந்துலவுக்கு கடிதம்

யாழ்ப்பாணத்துக்கான அத்தியாவசிய உணவு மற்றும் மருந்துப் பொருள் விநியோகத்துக்காக ரயில் சேவையை பயன்படுத்த உரிய ஏற்பாடுகளை செய்து தருமாறு போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தனவிடம் அங்கஜன் இராமநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் யாழ். கொழும்புக்கிடையில் அத்தியாவசிய உணவு மற்றும் மருந்துப்பொருள் 06

## மே 9 ஆம் திகதி வன்முறை மேலும் 14 பேர் கைது

மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறை மற்றும் கலவரச் சம்பவங்கள் தொடர்பாக கடந்த 24 மணி நேரத்துள் மேலும் 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 857 சம்பவங்கள் தொடர்பாக இதுவரை 03 ஆயிரத்து 56 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது. 06

எம்பிலிப்பிட்டியவில் இரு பிள்ளைகளுடன் குளத்தில் குதித்த தாய்;

## தாயும் மகளும் பலி; 11 வயது மகன் காப்பாற்றப்பட்டுள்ளார்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

எம்பிலிப்பிட்டிய பகுதியில் தாய் ஒருவர் தமது இரு பிள்ளைகளுடன் ஆற்றில் குதித்து தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்துள்ள சம்பவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளதுடன் சம்பவத்தில் 32 வயது தாயும் 5 வயது மகளும் மரணமடைந்துள்ளதுடன் 11 வயது மகன் காப்பாற்றப்பட்டுள்ளார்.

தாயும் மகளும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளனர்.

எம்பிலிப்பிட்டி சந்திரிகாவெவ குளத்திலேயே மேற்படி தாய் தமது இரு பிள்ளைகளுடன் தற்கொலை செய்து கொள்வதற்காக குதித்துள்ளதுடன் பொலிஸாரும் பிரதேசவாசிகளும் இணைந்து அவர்களை மீட்டு ஆஸ்பத்திரியில் சேர்த்துள்ளனர்.

குறித்த 32 வயது தாய் சூரியவெவ பகுதியை 06

## பாராளுமன்ற அமர்வுகள் மூன்று தினங்களுக்கு மட்டுப்படுத்தல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக இம்முறை பாராளுமன்ற அமர்வுகளை மூன்று தினங்களுக்கு மட்டுப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் நேற்று முன்தினம் கூடிய பாராளுமன்ற விவகாரங்கள் தொடர்பான தெரிவுக்குழுவின் அமர்வின் போதே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கிணங்க பாராளுமன்ற அமர்வுகள் எதிர்வரும் ஐந்தாம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில் எதிர்வரும் 7ஆம் 8 ஆம் திகதிகளில் பாராளுமன்ற அமர்வுகளை நடத்துவதில்லை என்ற தீர்மானம் அந்த கூட்டத்தின் போது எடுக்கப்பட்டுள்ளது. 06

## வெளிநாட்டமைச்சின் கொன்சியூலர் பிரிவு திங்கள் முதல் தினமும் திறக்க தீர்மானம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வெளிநாட்டு அமைச்சின் கீழ் செயற்படும் கொன்சியூலர் பிரிவை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வாரத்தின் அனைத்து நாட்களிலும் திறந்து சேவைகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

கொன்சியூலர் சேவை தொடர்பில் நிலவும் அதிகரித்த வேண்டுகோளை கவனத்தில் கொண்டும் பொது மக்களுக்கு அவசியமான சேவைகளை 06

# சர்வதேச செய்திகள்

## அமெரிக்காவின் முக்கிய தேடப்படுவோர் பட்டியலில் 'கிரிப்டோ ராணி'யின் பெயர்



காணாமல்போயுள்ள கிரிப்டோ ராணி என்று அறியப்படும் ருஜா இக்னடோவா என்ற பெண் அமெரிக்கா புலனாய்வுப் பிரிவான எப்.பி.ஐயினால் தேடப்பட்டு வரும் முக்கிய 10 பேர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தனது 40 வயதுகளில் இருக்கும் பல்கேரியாவைச் சேர்ந்த அவர் 'வைன்கொயின்' என்று அழைக்கப்படும் கிரிப்டோ நாணய மோசடியில் ஈடுபட்டவர் என தேடப்பட்டு வருகிறார். இவர் பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து 4 பில்லியன் டொலருக்கு மேல் மோசடி செய்து தலைமறைவாகி இருப்பதாக எப்.பி.ஐ தெரிவித்துள்ளது.

அமெரிக்கா பிடியாணை பிறப்பித்த 2017 ஆம் ஆண்டு தொடக்கம் அவர் காணாமல்போயுள்ளார்.

கிரிப்டோ கரன்சி என்று அழைத்துக் கொண்ட வன்கொயின், 2014இல் அதிக நபர்களுக்கு நாணயத்தை விற்றால் வாங்குபவர்களுக்கு தரகுப் பணம் வழங்க ஆரம்பித்தது. எனினும் இந்த முறை பாதுகாப்பு அற்றது என்று எப்.பி.ஐ குறிப்பிட்டது.

இந்நிலையில் இக்னடோவாவை கைது செய்வதற்கு துப்பு வழங்குபவருக்கு 100,000 டொலர் சன்மானம் அளிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எப்.பி.ஐயினால் தேடப்படும் முதல் பத்துப் பேரில் இருக்கும் முதல் பெண் இவராவார்.

2017இல் பல்கேரியாவில் இருந்து கிரேக்கத்துக்கு செல்லும் விமானம் ஒன்றிலேயே அவர் கடைசியாக காணப்பட்டுள்ளார். அது தொடக்கம் அவர் தொடர்ந்து காணாமல்போனவராக உள்ளார்.

## ஹொங்கொங்கின் ஆட்சி முறையை தொடர்வதற்கு சீன ஜனாதிபதி உறுதி



ஹொங்கொங்கில் ஆட்சி புரியும் சீனாவின் "ஒரு நாடு இரு ஆட்சி முறை" அந்த நகரை பாதுகாப்பதில் வெற்றி கண்டிருப்பதாகவும் நீண்ட காலத்துக்கு அது தொடரும் என்றும் சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் தெரிவித்துள்ளார்.

ஹொங்கொங் பிரிட்டனிடமிருந்து சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டு 25 ஆண்டு நிறைவை அனுசரிக்க அவர் ஹொங்கொங்கிற்குச் சென்றுள்ளார்.

ஹொங்கொங் பிரிட்டனிடமிருந்து சீனாவிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னரே, நகரின் உண்மையான ஜனநாயகம் ஆரம்பித்தது என்று ஷி குறிப்பிட்டார்.

"தாயகத்துடன் இணைந்த பின்னரே ஹொங்கொங்வாசிகள் சொந்த நகரின் ஆட்சியாளர்களாக மாறினர். நகரின் உண்மையான ஜனநாயகம் இங்கிருந்து ஆரம்பித்தது," என்று அவர் கூறினார்.

ஹொங்கொங்கின் நன்மைக்காகச் சீனா செயல்பட்டுள்ளதாகச் சொன்ன அவர் ஹொங்கொங்கின் திறந்த வர்த்தகச் சூழலுக்கு ஏதுவாக மத்திய அரசாங்கம் செயல்படும் என்று அவர் தெரிவித்தார்.

சீன ஜனாதிபதி ஷி தலை நிலத்தில் இருந்து கடந்த இரண்டு ஆண்டுகளில் முதல் முறை வெளியே பயணித்திருக்கும் இந்த விஜயத்தை ஒட்டி ஹொங்கொங்கில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அண்மைய ஆண்டுகளில் ஹொங்கொங்கில் சீனா தனது கட்டுப்பாடுகளை பலப்படுத்தி சட்டங்களை இறுக்கி இருப்பது கடும் விமர்சனத்திற்கு உள்ளாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## உக்ரைனுக்கு அமெரிக்கா மேலும் 800 மில். டொலர் இராணுவ உதவி



உக்ரைனுக்கு 800 மில்லியன் டொலர் மதிப்புடைய இராணுவ உதவி வழங்கப்படும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

உக்ரைனுக்கு அமெரிக்கா ஒதுக்கியுள்ள 40 பில்லியன் டொலர் மதிப்புடைய உதவித் திட்டத்தில் ஓர் அங்கமாக இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

உக்ரைனில் போர் ஆரம்பித்ததில் இருந்து 6.1 பில்லியன் டொலர் மதிப்புமிக்க ஆதரவை வழங்க அமெரிக்கா உறுதியளித்துள்ளது.

"போர் எவ்வாறு முடிவுக்கு வரும் என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் உக்ரைனின் தோல்வியுடன் அது நிறைவடையாது," என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் குறிப்பிட்டார். எவ்வளவு காலம் எடுத்தாலும் அமெரிக்காவும் அதன் தோழமை நாடுகளும் உக்ரைனுக்கு ஆதரவு அளிக்கவுள்ளதாக அவர் கூறினார்.

இந்த புதிய அறிவிப்பின் மூலம் அடுத்த சில வாரங்களுக்கு உக்ரைனுக்கு தடங்கல் இன்றி ஆயுதங்கள் செல்வது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் பீரங்கி, ஹொவிட்ஸர்கள், வெடிமருந்துகள் மற்றும் மூலோபாய ஆளில்லா விமானங்கள் அடங்குகின்றன. தவிர, உக்ரைன் பொருளாதாரத்தின் ஸ்திரத்தன்மைக்கு உதவும் வகையில் அமெரிக்கா 500 மில்லியன் டொலர் நேரடி பொருளாதார உதவியை வழங்கவுள்ளதாகவும் பைடன் அறிவித்துள்ளார்.

மேலும் பல பில்லியன் டொலர் உதவியை வழங்க கொங்கிரஸின் அனுமதியை கோரவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

### ரஷ்யப் படையெடுப்புக்குப் பின்:

## உக்ரைனில் இருந்து முதல் தானிய கப்பல் புறப்பட்டது

உக்ரைனில் ரஷ்யாவின் கைவசம் உள்ள பெர்டியான்ஸ்க் துறைமுகத்திலிருந்து 7,000 தொன் தானியங்கள் கொண்ட கப்பல் புறப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் ரஷ்யா நியமித்திருக்கும் அதிகாரி இதனைத் தெரிவித்தார்.

ரஷ்யா உக்ரைன் போர் ஆரம்பித்த பின் அங்கிருந்து புறப்பட்டிருக்கும் முதல் தொகுதி தானியங்கள் இவையாகும். கருங்கடலில் உள்ள ரஷ்ய கப்பல்கள், பயணத்தை உறுதிசெய்யும் என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் கடந்த வியாழக்கிழமை புறப்பட்ட இந்தக் கப்பல் எங்கு செல்கிறது என்பது உறுதி செய்யப்படவில்லை.

உக்ரைனியத் துறைமுகங்களில் தானியக் கப்பல்கள் முடங்கியதால், உலகெங்கும் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டது. ரஷ்யாவும் அதன் நட்பு நாடுகளும் தங்கள் தானியங்களைக் களவாடுவதாக உக்ரைன் குற்றம்சாட்டுகிறது.

மறுபுறம் உலகின் மிகப்பெரிய கோதுமை ஏற்றுமதி நாடாக உள்ள ரஷ்யா, மேற்கத்திய தடைகளினால் தமது சொந்த ஏற்றுமதிகளை மேற்கொள்வதில் சிக்கல்களை எதிர்கொண்டு வருகிறது.

இந்த சூழலில் பாதிக்கப்படக்கூடிய நாடுகளில் பஞ்சம் ஏற்படக் கூடிய சாத்தியம் பற்றி எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக உக்ரைனிய ஏற்றுமதிகளில் அதிகம் தங்கி உள்ள ஆபிரிக்க பிராந்தியம் அதிக நெருக்கடிக்கு உள்ளாகி உள்ளது.



உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பு உலகெங்கும் உணவு விலை அதிகரிக்கக் காரணமாகியுள்ளது.

## இஸ்ரேலின் புதிய பிரதமராக பதவி ஏற்றார் யயிர் லப்பிட்



இஸ்ரேலின் பிரதமர் பதவி ஓர் ஆண்டு காலத்திற்குள் நப்டாலி பனட்டிடம் இருந்து யயிர் லப்பிட்டிடம் வழங்கப்பட்டுள்ளது. அவர் ஓர் இடைக்கால பிரதமராகவே நியமிக்கப்பட்டுள்ளார்.

மையவாதக் கட்சி ஒன்றின் தலைவரான லபிட் வரும் நவம்பர் 1 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் வரை அந்தப் பதவியில் நீடிக்கவுள்ளார்.

பனட்டுடன் இணைந்து உருவாக்கப்பட்ட கூட்டணி அரசு கடந்த வாரம் உடைந்ததை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி இஸ்ரேலில் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு குறைவான காலத்தில் ஐந்தாவது தேர்தல் நடத்தப்படவுள்ளது. இந்நிலையில் லபிட்டுக்கு முன்னாள் பிரதமர் பென்ஜமின் நெதன்யாகு கடும் சவாலாக உள்ளார். தாம் மீண்டும் பதவிக்கு வருவதாக அவர் சூளுரைத்துள்ளார்.

பலஸ்தீனத்துடனான பிரச்சினைக்கு இரு நாட்டு தீர்வு ஒன்றுக்கு முன்னர் உறுதி அளித்திருந்த புதிய பிரதமர், தற்போதைய சூழலில் அதற்கான வலுவான நடவடிக்கைகளை எடுப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று கூறப்படுகிறது.

சுழற்சி முறையில் பிரதமர் பதவியை வகிக்கும் முந்தைய உடன்படிக்கையின் கீழ் கடந்த வியாழக்கிழமை பன்னட் தனது பதவியை லப்பிட்டிடம் வழங்கினார்.

இஸ்ரேலில் ஆட்சி அமைப்பதற்கு எந்தக் கட்சியும் போதுமான பெரும்பான்மையை வெல்ல தவறி வரும் சூழலில் 2019 தொடக்கம் அங்கு அடிக்கடி தேர்தல் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானில் காகித நெருக்கடி: பல மில்லியன் மாணவர் பாதிப்பு



பாகிஸ்தானில் பொருளாதார நெருக்கடி, அதிகரித்திருக்கும் பணவீக்கம் மற்றும் அதிக வரியால் காகித இறக்குமதிக்கு நெருக்கடி ஏற்பட்டிருக்கும் சூழலில் அது மாணவர்களுக்கான பாடப் புத்தகங்களை அச்சிடுவதிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

புதிய கல்வி ஆண்டுக்காக மில்லியன் கணக்கான மாணவர்கள் பாடப் புத்தகங்களை பெறாத நிலையில் அவசர நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் சிந்த், பஞ்சாப் மற்றும் கைபர் பக்துங்கவா மாகாணங்களின் பாடசாலை நிர்வாகங்களால் புதிய புத்தகங்களை அச்சிட முடியாத நிலை ஏற்படும் என்று பாகிஸ்தானின் பதிப்பாளர்கள் மற்றும் புத்தக விற்பனையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஒரு கிலோ உள்ளூர் காகிதம் 100 ரூபாவாக அதிகரித்திருப்பது அச்சு மற்றும் பொதியிடல் துறைகள் வீழ்ச்சியை நோக்கிச் செல்லக் காரணமாகியுள்ளது என்று அந்த சங்கத்தின் தலைவர் அசீஸ் காலித் தெரிவித்துள்ளார்.

பாக். அரசு கடும் வரி விதிக்கும் நிலையில் பதிப்பாளர்கள் இறக்குமதி காகிதங்களின் பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளனர். உள்ளூர் காகிதங்கள் ஒப்பிட்டளவில் விலை குறைவாக இருந்தபோதும் அது இந்த ஆண்டு சுமார் 200 வீதம் விலை உயர்வை கண்டுள்ளது.

## தொற்றுநோய் தடுப்புக்கு உலக வங்கியால் நிதியம்



தொற்று நோய்களுக்கு எதிரான போராட்டத்தை வலுப்படுத்துவதற்காக முதலீடுகளுக்கு நிதி அளிக்கும் நிதியம் ஒன்றை உருவாக்க உலக வங்கியின் நிர்வாக சபை ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த நிதியம் கீழ் மற்றும் நடுத்தர வருவாய் கொண்ட நாடுகளில் நோய் தடுப்பு, தயார்நிலை மற்றும் பதில் நடவடிக்கைகளுக்கு உதவும் என்று உலக வங்கி வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

'கொவிட்19 மனித, பொருளாதார மற்றும் சமூக இழப்புகளை ஏற்படுத்திய நிலையில் அது வலுவான சுகாதார முறைகளை கட்டியெழுப்புவது மற்றும் மேலதிக வளங்களை குவிப்பதற்கு கூட்டு நடவடிக்கையின் தேவையை காட்டுவதாக உள்ளது' என்று கடந்த வியாழக்கிழமை வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு இறுதியில் திறப்பதற்கு திட்டமிடப்பட்டிருக்கும் இந்த நிதியம் ஜி20 நாடுகளின் தலைமைத்துவத்தின் ஓர் அங்கமாக அமெரிக்கா, இத்தாலி மற்றும் இந்தோனேசியாவின் தலைமையில் உருவாக்கப்படவுள்ளது.

ஏற்கனவே 1 பில்லியன் டொலருக்கான உறுதிமொழி இந்த நிதியத்திற்கு கிடைத்திருப்பதோடு அந்தப் பணம் நோய் கண்காணிப்பு உட்பட பல விடயங்களுக்கு பயன்படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டத்திற்கு ஒரு பங்காளியாக உள்ள உலக சுகாதார அமைப்பு தொழில்நுட்ப நிபுணர்களை வழங்கும் என்று அந்த அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனொம் கெப்ரியேசஸ் குறிப்பிட்டார்.

## ஈக்வடோரில் போராட்டத்தை கைவிட அரசுடன் உடன்பாடு



ஈக்வடோரில் கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களை கைவிடுவதற்கு அந்நாட்டு பழங்குடி தலைவர்கள் அரசாங்கத்துடன் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளனர்.

அதிகரித்துள்ள எரிபொருள் மற்றும் உணவு விலைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கும்படி கோரி ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதிகளை முடக்கியதோடு பேரணிகளை நடத்தினர்.

சில ஆர்ப்பாட்டங்களில் வன்முறை வெடித்த நிலையில் பாதுகாப்பு படையினருடனான மோதல்களில் குறைந்தது ஆறு பேர் உயிரிழந்தனர்.

இந்நிலையில் இந்த உடன்படிக்கையின் ஓர் அங்கமாக, எரிபொருள் கலன் ஒன்றின் விலையை 15 வீதம் குறைப்பதற்கு ஈக்வடோர் அரசு இணங்கியுள்ளது.

எண்ணெய் உற்பத்தி நாடான ஈக்வடோரில் கடந்த 2020க்குப் பின் டீசல் விலை கிட்டத்தட்ட இரட்டிப்பாகி உள்ளதோடு பெட்ரோல் விலை வேகமாக அதிகரித்துள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரியதன் பாதி அளவு சலுகையை வழங்கவே அரசு இணங்கியபோதும், அது ஆண்டு ஒன்றில் நாட்டுக்கு 340 மில்லியன் டொலர் இழப்பை ஏற்படுத்தும் என்று ஈக்வடோர் நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எதிர்கால சுரங்கம் மற்றும் எண்ணெய் அபிவிருத்தி வேலைகள் மற்றும் ஏனைய விரிவாக்க பணிகளில் பழங்குடிகளின் ஆலோசனையை பெறுவதற்கும் அரச பேச்சுவார்த்தையாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

## கலாநிதி நந்தலால் வீரசிங்க மேலும் 06 வருடங்கள் மத்திய வங்கி ஆளுநராக நியமனம்



கலாநிதி நந்தலால் வீரசிங்க எதிர்வரும் 04 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மேலும் 06 வருடங்களுக்கு மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். இதற்கான நியமனக் கடிதம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் (30) பிற்பகல் கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகையில் வைத்து நந்தலால் வீரசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

## வன்னி விவசாயிகளுக்கு எரிபொருள் விநியோகம் தொடர்பில் கலந்துரையாடல்



விவசாயிகளின் உற்பத்திக்கு வலுச் சேர்க்கும் வகையில் வன்னி மாவட்ட விவசாயிகளின் சிறுபோக அறுவடைக்குத் தேவையான எரிபொருளை விரைவாக விநியோகிப்பது தொடர்பாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர , அமைச்சின் செயலாளர் புஷ்ப குமார ஆகியோருடனான கலந்துரையாடலொன்று (30) விவசாய அமைச்சில் நடைபெற்றது.

இதன்போது இராணுவ மற்றும் ஏனைய எரிபொருள் நிரப்பு நிலையங்களூடாக விவசாயிகளின் சிறுபோக அறுவடைக்கு தேவையான எரிபொருளை அவசரமாக விநியோகிப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இக் கலந்துரையாடலின் போது வட மாகாண அரிசி ஆலை உரிமையாளர்கள் அண்மை காலமாக எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் சம்பந்தமாகவும் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது.

## துவிச்சக்கரவண்டி ஒன்றின் விலை 50 ஆயிரம் ரூபாவைக் கடந்துள்ளது

பொருளாதார நெருக்கடியான நிலையில் சாதாரண துவிச்சக்கரவண்டி ஒன்றின் விலை, 50 ஆயிரம் ரூபாவைக் கடந்துள்ளதாக விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், புதிய வடிவிலான மற்றும் வெவ்வேறு தொழில்நுட்பங்களுடன் தயாரிக்கப்பட்ட துவிச்சக்கர வண்டிகள், ஒரு இலட்சம் ரூபா வரையான விலையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அதேநேரம், துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்களின் விற்பனையும் அதிகரித்துள்ளதாக விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர். இதன் காரணமாக, உதிரிப்பாகங்களின் விலையும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில், கிராமங்களிலும், நகரங்களிலும் உள்ள மக்கள் துவிச்சக்கர வண்டிகளையும், அதன் உதிரிப்பாகங்களையும் கொள்வனவு செய்யும் போக்கு குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

துவிச்சகர வண்டிகளைக் கொள்வனவு செய்வதற்காக, நாட்டின் பல பாகங்களிலும் உள்ள துவிச்சக்கரவண்டி விற்பனை நிலையங்களை மக்கள் அதிகளவில் நாடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### வலுசக்தி, வேலைவாய்ப்பு, முதலீடு

## இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக ஓமான் தூதுவர் ஜனாதிபதியிடம் உறுதி



எரிபொருள், எரிவாயு, வலுசக்தி, வேலைவாய்ப்பு மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பில் இரு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக ஓமான் தூதுவர் அஹ்மத் அலி சயீத் அல் ரஷ்தி (Ahmed Ali Saeed Al Rashdi) ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

தனது சேவையை முடித்துக் கொண்டு நாட்டை விட்டு வெளியேறவுள்ள ஓமான் தூதுவர் நேற்று (01) முற்பகல் கொழும்பு, கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

ஓமானில் தற்போது சுமார் 25,000 இலங்கையர் பணிபுரிகின்றனர். பயிற்சித் துறையில் தொழில் வாய்ப்புகளை அதிகரிப்பதற்கும் உதவுமாறு ஜனாதிபதி தூதுவரிடம் கேட்டுக் கொண்டார். சயீத் அல் ரஷ்தியின் 08 வருட பதவிக் காலத்தில் இலங்கைக்கு வழங்கிய ஆதரவைப் பாராட்டிய ஜனாதிபதி, இந்நாட்டின் வர்த்தகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புகளுக்கான பரந்த வாய்ப்புகள் குறித்தும் கலந்துரையாடினார்.

தான் ஓமான் வெளிவிவகார அமைச்சில் சேவைபுரிய செல்லவிருப்பதாகவும் இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை வலுப்படுத்துவதற்கு அங்கிருந்து நடவடிக்கை எடுப்பதாக ரஷ்தி ஜனாதிபதியிடம் 06



முன்னாள் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இணைந்து கொண்டார். கட்சி தலைமையகத்தில் முன்னாள் ஜனாதிபதியும் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து கட்சியின் உறுப்புரிமை அட்டையை பெற்றுக்கொண்டபோது பிடிக்கப்பட்ட படம்.

### யாழ்.எரிபொருள் நிலையத்தருகே

## த.தேசிய பண்பாட்டு பேரவையின் நிஷாந்தன் மீது வாள் வெட்டு

**யாழ். விசேட நிருபர்**

தமிழ்த் தேசிய பண்பாட்டு பேரவையின் ஒருங்கிணைப்பாளர் நிஷாந்தனின் மீது இனந்தெரியாத மர்ம நபர்களால் சரமாரியாக வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கச்சேரி எரிபொருள் நிலையத்துக்கருகில் நேற்று வெள்ளிக்கிழமை காத்திருந்த போது பின்னால் வந்த இருவர் இவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியுள்ளனர். படுகாயமடைந்த அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். 06

## விபத்துக்களால் 12,000 பேர் வருடாந்தம் உயிரிழப்பு

நாட்டில் விபத்துக்களால் வருடாந்தம் 12,000 பேர் உயிரிழப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் சுமார் 3,000 பேர் வீதி விபத்துக்களினால் உயிரிழப்பதாக போக்குவரத்து, கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்புக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மாஅதிபர் இந்திக்க ஹப்புகொட தெரிவித்துள்ளார்.

மேலும், பெரும்பாலான வயோதிபர்கள் கீழே விழுவதனூடாக விபத்துக்களுக்கு உள்ளாகின்றனர் என்று சுகாதார அமைச்சின் இளைஞர், முதியோர் மற்றும் ஊனமுற்றோர் பிரிவின் பிரதான விசேட வைத்திய நிபுணர் ஷிரோமி மதுவகே கூறியுள்ளார்.

## கட்டுகஸ்தொட்டையில் தனிப்பட்டவர்களின் வங்கி கணக்குகளில் பணம் திருட்டு

### பொலிஸார் எச்சரிக்கை

கட்டுகஸ்தொட்ட பிரதேசத்தில் இருவரை ஏமாற்றி அவர்களின் தனிப்பட்ட தகவல்களை பெற்று அவர்களின் வங்கிக் கணக்கில் இருந்து ஒரு இலட்சத்து பத்தாயிரம் ரூபாவை மோசடி செய்துள்ளதாக கட்டுகஸ்தொட்ட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிறவியிலேயே அங்கவீனமுற்ற தனது மகளுக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என்றும் அதற்காக 62 இலட்சம் ரூபா தேவைப்படுவதாகவும் முடிந்தால் அதற்கு உதவுமாறும் கோரி, குறித்த குழந்தையின் தந்தை முகப்புத்தகத்தில் கோரிக்கை விடுத்திருந்தார்.

அதன் படி ஒருவர் தொலைபேசி அழைப்பு ஏற்படுத்தி பண உதவி செய்வதற்காக அவருடைய வங்கிக் கணக்கு இலக்கம் மற்றும் அடையாள அட்டை இலக்கத்தையும் அனுப்புமாறு கூறியுள்ளார்.

பின்னர் அந்த நபருக்கு வங்கி கணக்கு இலக்கம் மற்றும் அடையாள அட்டை இலக்கம் என்பவற்றையும் அனுப்பியுள்ளார்.

குறித்த மோசடியாளர் அந்தத் தரவைப் பயன்படுத்தி க்யூஆர் (QR) குறியீட்டை உருவாக்கி, மேற்கூறிய கணக்கில் இருந்து ஒரு இலட்சம் ரூபாய் பெற்றுள்ளார்.

இதேவேளை, நாய்க்குட்டிகளை விற்பனை செய்யும் நபர் ஒருவர், நாய்க்குட்டிகளை விற்பனை செய்வதற்கு முகப்புத்தகத்தில் விளம்பரம் செய்துள்ளார்.

ஒரு குறிப்பிட்ட நபர், அவரிடமிருந்து வங்கிக் கணக்கு இலக்கம் மற்றும் அடையாள அட்டை இலக்கம் ,கணக்கு எண் மற்றும் அடையாள எண்ணைப் பெற்று, அவரது கணக்கில் இருந்து பத்தாயிரம் ரூபாவை பெற்றுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பயிற்சியில் ஈடுபட்டிருந்த இராணுவ வீரர் காட்டு யானை தாக்கி பலி

அரலகங்வில வலமண்டிய காட்டுப் பகுதியில் யானை தாக்கியதில் இராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 19 வயதுடைய இராணுவ வீரர் என தெரியவந்துள்ளது. இராணுவ பயிற்சி குழுவொன்று பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளையில் இந்த காட்டு யானை தாக்குதல் இடம்பெற்றுள்ளது. காயமடைந்த இராணுவ சிப்பாய் அரலகங்வில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த இராணுவ சிப்பாய் மாதுரு ஓயா இராணுவ சிறப்புப் படைப் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி பெற்று வந்தவராவார். அவர் அம்பகஸ்துவ தங்கமுவ பிரதேசத்தில் வசிப்பவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

## வவுணதீவு, வலையிறவு ஆற்றுக்குள் குடைசாய்ந்த லொறி



**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு, வவுணதீவு வலையிறவுப் பாலத்தருகில் கனரக லொறியொன்று வீதியைவிட்டு விலகி வலையிறவு ஆற்றுக்குள் வீழ்ந்துள்ளது. இச் சம்பவம் வெள்ளிக்கிழமை(01) காலை இடம்பெற்றது.

இவ்வீதியால் இரண்டுலொறிகள் பயணித்த போது ஒரு லொறியை மற்றைய லொறி முந்திச் செல்ல முற்பட்ட போதே இச்சம்பவம் இடம் பெற்றதாக தெரியவருகின்றது.

வீதியை விட்டு விலகி ஆற்றுக்குள் குடைசாய்ந்த வாகனத்துக்கு சேதம் ஏற்பட்டுள்ளதுடன் வாகனத்தின் சாரதியும் நடத்துனரும் தெய்வாதினமாக உயிர் தப்பியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வவுணதீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வைத்தியசாலைக்கு மாற்றுவதில் ஏற்பட்ட தாமதம்; நான்கு வயது குழந்தை பலி

ஆனமடுவ, இஹல திவுல்வெவ பிரதேசத்தை அண்மித்த திவுல்வெவ பிரதேசத்தில் வசித்து வந்த நான்கு வயது குழந்தையொன்று புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

துஷேன் சஞ்சித என்ற தமது குழந்தையே உயிரிழந்துள்ளதாக பெற்றோர் தெரிவித்தனர்.

ஆனமடுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் உள்ள குழந்தையை வேறு வைத்தியசாலைக்கு மாற்றுவதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக குழந்தை உயிரிழந்துள்ளதாக பெற்றோர் குற்றம் சுமத்துகின்றனர். இது தொடர்பில் ஆனமடுவ ஆதார வைத்தியசாலையின் 06

### கண்டி தேசிய வைத்தியசாலையில்

## வைத்தியரின் மோட்டார் சைக்கிளில் பெட்ரோல் திருடியவர் கைது

கண்டி தேசிய வைத்தியசாலை வளாகத்துக்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வைத்தியர் ஒருவரின் மோட்டார் சைக்கிளிலிருந்து எரிபொருளைத் திருடிய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

எரிபொருள் நெருக்கடியால் குறித்த வைத்தியர் மோட்டார் சைக்கிளில் வைத்தியசாலைக்கு வருவதுடன் அன்றைய தினம் வழமை போல 28ஆம் இலக்க வார்டுக்கு அருகில் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு வைத்தியசாலைக்குள் சென்றுள்ளார். 06

### இலங்கைக்கு கடத்தவிருந்த

## 480 கிலோ கடல் அட்டைகள் தமிழகத்தில் கைப்பற்றல்

இலங்கைக்கு கடத்துவதற்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 480 கிலோ கடல் அட்டைகள் தமிழகத்தில் உள்ள மண்டபம் முகாம் அருகே நேற்று முன்தினம் (30) மாலை மீட்கப்பட்டுள்ளது. மண்டபம் அருகே வேதாளை கடற்கரை பகுதியில் இருந்து இலங்கைக்கு கடத்துவதற்காக கடல் அட்டைகள் 06

## கிராமப்புற பாடசாலைகளை வருகை தரக்கூடிய ஆசிரியர்களுடன் நடாத்துதல்

### வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர்

வட மாகாண பாடசாலைகளை தொடர்ந்து நடாத்திச் செல்வது தொடர்பில் வடமாகாண ஆளுநருடன் கலந்துரையாடி தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் வரதீஸ்வரன் தெரிவித்தார்.

அந்த வகையில் கிராமப்புற பாடசாலைகளை வருகை தரக்கூடிய குறைந்தபட்ச ஆசிரியர்களைக் கொண்டு தொடர்ந்து நடாத்துதல்.

ஏனைய அனைத்துப் பாடசாலைகளிலும் இவ்வாண்டு க.பொ.த சா/த மற்றும் உ/த பரீட்சைகளுக்கு தோற்றும் மாணவர்களுக்கான வகுப்புக்களை சமுகமளிக்கக் கூடிய ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் நடாத்துதல்.

இவ்விடயம் தொடர்பில் பாடசாலை தமது வலயக் கல்விப் பணிப்பாளருடன் கலந்துரையாடி பொருத்தமான முடிவுகளை எடுக்கலாம் என்றார்.

ஆகவே மாணவர்களின் கல்விக்காக தம்மால் இயன்றளவு ஒத்துழைப்புக்களையும் உதவிகளையும் தன்னார்வமாக வழங்குமாறு அனைத்து தரப்பினரையும் கேட்டுக் கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்படும் அபாயத்தில்

இலங்கையில் ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 200 சிறிய மற்றும் நடுத்தர ஆடைத் தொழிற்சாலைகள் இவ்வாறு மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது.

எரிபொருள் பற்றாக்குறை மற்றும் மின்சாரத் தடை காரணமாக இவ்வாறு ஆடைக் கைத்தொழிற்சாலைகள் மூடப்படும் அபாயத்தை கொண்டுள்ளது.

பெரிய ஆடைத் தொழிற்சாலைகள் ஐ.ஓ.சீ நிறுவனத்திடமிருந்து எரிபொருள் பெற்றுக் கொண்ட போதிலும், சிறிய மற்றும் நடுத்தர ஆடைத் தொழிற்சாலைகள் எரிபொருள் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரிவோர் போக்குவரத்து பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## நாணய மாற்று


| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 243.44 | 255.14 |
| கனடியன் டொலர் | 274.28 | 287.13 |
| யூரோ | 370.41 | 385.18 |
| ஜப்பான் யென் | 2.5919 | 2.7006 |
| சிங்கப்பூர் டொலர் | 254.57 | 265.09 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 430.03 | 447.02 |
| சுவிஸ் பிராங்க் | 371.37 | 387.81 |
| அமெரிக்க டொலர் | 355.76 | 367.12 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரைன் டினார் | 954.54 | கட்டார் ரியால் | 97.98 |
| குவைத் டினார் | 1,173.57 | சவூதி ரியால் | 95.91 |
| ஓமான் ரியால் | 934.73 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 97.97 |

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆனி மாதம் 18ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்ஹிஜ்ஜஹ் பிறை 02

## குறள் தரும் சிந்தனை



பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்து
உள்வேர்ப்பர் ஒள்ளி யவர்

பகையை வீழ்த்திட அகத்தில் சினங்கொண்டாலும்
அதனை வெளிப்படுத்தாமல் இடம் காலம்
இரண்டுக்கும் காத்திருப்பதே அறிவுடையார் செயல்

# மக்கள் வாழ்வில் புகுந்து கொண்ட நவீனத்தின் எல்லை இதுதான்!

நாட்டில் தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியானது வறிய மக்கள் தொடக்கம் செல்வந்தர்கள் வரை மிக மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. பாதிப்புற்ற மக்களில் வறிய மக்களின் நிலைமைதான் பரிதாபமாக உள்ளது. நிரந்தர வருமானம் இல்லாத அவர்கள் இன்றைய விலைவாசி அதிகரிப்பை சமாளிக்க முடியாமல் திண்டாடுவது வேதனைக்குரியதாகும்.

நாட்டில் இரு வருட காலமாக நிலவிய கொவிட் தொற்று காரணமாக பொருளாதார வருமானங்கள் அத்தனையும் முடங்கிப் போனதாலும், கொவிட் தொற்றை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக அரசாங்கம் பெருமளவு நிதியைச் செலவிட்டதாலுமே பொருளாதாரம் இத்தனை மோசமாக முடங்கிப் போயுள்ளதாகக் கூறப்பட்டாலும், அது விடயத்தில் ஏனைய சில காரணங்களையும் புறக்கணித்து விட முடியாது.

நாட்டின் பொருளாதாரத் திட்டங்களில் கடைப்பிடிக்கப்பட்ட தவறான விடயங்களாலேயே நிலைமை இன்று இத்தனை மோசமாகியுள்ளதென்பதுதான் பலரதும் கருத்தாக இருக்கின்றது. ஆனாலும் இன்றைய வீழ்ச்சியை உடனடியாக நீக்கிவிட முடியாது. அது ஓரிரு நாட்களில் சாதிக்கக் கூடிய விடயமல்ல. எமது நாடு பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீள்வதாயின், அதற்கு நீண்ட காலம் செல்லக் கூடுமென்பதுதான் பொருளாதார நிபுணர்களின் கருத்தாக உள்ளது. அதுவரை மக்கள் அனைவரும் பொறுமை காப்பதே முக்கியமாகும்.

மக்கள் ஆங்காங்கே ஆர்ப்பாட்டம் நடத்துகின்றார்கள். ஊடகங்கள் அந்த ஆர்ப்பாட்டங்களை சற்று மிகைப்படுத்திக் காண்பிக்கின்றன. எரிபொருளுக்காக ஆர்ப்பாட்டம் நடத்துவோர்தான் அதிகம். டீசல், மண்ணெண்ணெய், பெற்றோல், சமையல் எரிவாயு ஆகியவற்றுக்காகவே அதிகமான போராட்டங்கள் நடைபெறுகின்றன. எரிபொருள் இல்லாது போனால் நாடே ஸ்தம்பித்து விடுமென்பது இப்போதுதான் நன்கு தெரிகின்றது. மக்களின் செயற்பாடுகளை அன்றாடம் இயக்கிக் கொண்டிருப்பதே எரிபொருள்தான்.

நாட்டு மக்கள் பயன்படுத்துகின்ற மொத்த மின்சாரத்தின் பெரும் பகுதியும் எரிபொருளைக் கொண்டே தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. எனவேதான் எமது நாட்டுக்கான எரிபொருளின் தேவை மிகவும் அதிகமானதாக இருக்கின்றது. எத்தனை எரிபொருள் கப்பல்கள் நாட்டை வந்தடைந்த போதிலும், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எவ்வேளையிலும் கியூவரிசை முடிவின்றித் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது. எதிர்காலத்திலும் இந்தக் கியூவரிசை முடிவின்றித் தொடரப் போகின்றதோ என்றுதான் நினைக்கத் தோன்றுகின்றது.

எமது நாட்டில் எரிபொருள் பற்றாக்குறை ஏற்படுமென்றோ அல்லது மின்சாரத்துக்கான நெருக்கடியை எதிர்கொள்வோமென்றோ நாம் ஒருபோதுமே நினைத்தும் பார்க்கவில்லை. எமது கடந்தகால ஆட்சியாளர்களும் அதுபற்றி சிந்தித்துப் பார்க்கவில்லை. எதிர்கால நெருக்கடிகள் குறித்து கடந்த கால ஆட்சியாளர்கள் சிந்தித்துத் திட்டமிட்டு செயற்பட்டிருந்தால் இன்று எமது நாட்டுக்கு இந்நிலைமை ஏற்பட்டிருக்க மாட்டாது.

எரிபொருள் என்பது எதிர்காலத்தில் என்றோ ஒரு நாள் முடிவுக்கு வரப் போகின்ற வளமாகும். புவியில் எரிபொருள் வளம் படிப்படியாக குறைந்து கொண்டே போகின்றது. உலகில் மக்கள் பெருக்கம் அதிகரித்தபடி செல்கின்றது. மக்களின் தேவைகள் அதிகரித்துச் செல்கின்றன. மக்கள் தங்களது வாழ்க்கை வசதிகளுக்காக நவீன சாதனங்களை வாங்கிக் குவிக்கின்றனர். எனவே மின்சாரத்தின் தேவையும் நாளாந்தம் அதிகரித்தபடியே செல்கின்றது. அதிகளவு மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டிய தேவையும் ஏற்படுகின்றது. அது முடியாமல் போகின்ற போது மின்சார விநியோகத்தில் நெருக்கடி ஏற்படுகின்றது.

எரிபொருள் விடயத்திலும் இன்று ஏற்பட்டுள்ள பிரச்சினை இதுதான். எமது வாழ்வில் அத்தனை விடயங்களும் இயந்திரமயமாகி விட்டன. பொதுப்போக்குவரத்து வாகனங்களைப் பயன்படுத்துகின்ற பழக்கம் மக்களிடம் இல்லாமல் போயுள்ளது. ஒவ்வொருவரும் தத்தமக்கென தனியான வாகனங்களை பயன்படுத்தத் தொடங்கி விட்டனர். வசதி படைத்தவர்கள் ஆடம்பர வாகனங்களை வாங்கிக் குவித்து விட்டனர். வீதிகள் யாவும் நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கின்றன. நாட்டில் எரிபொருளின் தேவை அதிகமாகிச் செல்லும் போது அவற்றின் விலைகளும் அதிகரித்தபடியே செல்கின்றது.

விவசாயச் செய்கையை எடுத்துக் கொள்வோமானால் எமது நாட்டுக்குரிய பாரம்பரியங்கள் யாவும் வழக்கொழிந்து போய் விட்டன என்பதே உண்மை. மாடுகள் மூலம் வயல் உழுது, சூடு மிதித்து, மாட்டு வண்டிகளில் அறுவடை நெல்லை வீட்டுக்கு ஏற்றி வந்து விவசாயிகள் கடைப்பிடித்த வாழ்க்கை முறை முற்றாகவே இல்லாமல் போய் விட்டது. நெற்செய்கையில் அத்தனை வேலைகளுக்கும் இன்று நாம் இயந்திரங்களையே நம்பியுள்ளோம். டீசல் இல்லையெனில் அறுவடையே ஸ்தம்பித்துப் போய் விடுகின்றது.

எரிபொருள் வளத்தையும் நவீனத்தையும் கண்மூடித்தனமாக நம்பியதால் வந்துள்ள வினை என்றுதான் இதனைக் கூற வேண்டியுள்ளது. பரம்பரை பரம்பரையாக தங்களது காணிகளில் கிடைக்கின்ற விறகுகளைக் கொண்டு சமைத்து உண்ட கிராமத்து மக்கள், இன்று எரிவாயுவுக்காக போராட்டம் நடத்துகின்றனரென்றால் அம்மக்கள் எத்தனை தூரம் மாற்றமடைந்துள்ளனர் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்றைய எரிபொருள் பற்றாக்குறையும் நெருக்கடியும் ஒரு தெளிவான செய்தியை எமக்குச் சொல்கின்றன. 'நவீனம் என்பது ஒரு எல்லை வரை வரையறுக்கப்பட்டதுதான். அதற்கு அப்பால் எம்மால் செல்ல முடியாது' என்பதுதான் அச்செய்தி!

editor.tkn@lakehouse.lk

# உலகின் 110 நாடுகளில் மீண்டும் கால்பதித்துள்ள கொவிட் தொற்று



## ஆபத்து நிலைமைக்குள் பிரவேசிக்கின்றதா இந்தியா?

உலகின் பல நாடுகளில் கொரோனா மூன்றாவது அலை நிறைவடைந்துள்ள நிலையில் தற்போது உலகெங்கும் சுமார் 110 நாடுகளில் கொரோனா பாதிப்பு மீண்டும் அதிகரித்து வருவதாகவும், கொரோனா பிஏ4, பிஏ5 போன்ற உருமாறிய வைரஸ்களால் இந்த எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்து வருவதாகவும் உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது.

இந்தியாவில் கடந்த சில நாட்களாக கொரோனா பாதிப்பின் அளவானது மீண்டும் உச்சத்தை தொட்டு வருகிறது. 10 ஆயிரத்துக்குள் இருந்த பாதிப்பு கடந்த ஒரு வாரமாக அதிகரித்து 20 ஆயிரத்தை நெருங்கி வருகிறது.

ஒமிக்ரோன் பிஏ4, பிஏ5 வகை மாறுபாடு காரணமாக அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாடுகளில் கொரோனா பரவல் மீண்டும் கடுமையாக அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

இந்தியாவில் விரைவில் நான்காம் அலை உருவாகலாம் என விஞ்ஞானிகள் கணித்துள்ள சூழ்நிலையில், கடந்த சில நாட்களாக தேசிய அளவில் கொரோனா தினசரி பரவல் விகிதம் ரொக்கெட் வேகத்தில் அதிகரித்துள்ளது.

இந்தியாவில் கொரோனா பரவலை கட்டுப்படுத்த தடுப்பூசி நடவடிக்கைகளை தீவிரப்படுத்த, மாநில அரசுகளை மத்திய சுகாதாரத்துறை கேட்டுக் கொண்டுள்ள நிலையில், தற்போதைய சூழ்நிலையில் பொது இடங்களில் முகக்கவசம் அணிந்து கொரோனா தடுப்பு வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றுவது மட்டுமே, இந்தியாவில் கொரோனா 4 ஆம் அலை உருவாகாமல் தடுப்பதற்கு சிறந்த தீர்வாகும் என மருத்துவ நிபுணர்கள் கூறியுள்ளனர்.

இந்தியாவில் மட்டுமல்லாது உலக நாடுகளிலும் கொரோனா பாதிப்பு அதிகரித்து வரும் நிலையில் தற்போது உலகெங்கும் சுமார் 110 நாடுகளில் கொரோனா பாதிப்பு மீண்டும் அதிகரித்து வருவதாகவும், கொரோனா பிஏ4, பிஏ5 போன்ற உருமாறிய வைரஸ்களால் இந்த எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்து வருவதாகவும் உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது. இது குறித்து பேசிய உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதானோம்," கொரோனா தொற்றுநோய் மாறுகிறது, ஆனால் அது முடிவடையவில்லை" என்றார்

கொரோனா வைரஸைக் கண்காணிப்பதற்கான எங்கள் திறனே அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கிறது. மேலும் மரபணு வரிசைகள் குறைந்து வருவதால், ஒமிக்ரோனை கண்காணிப்பது கடினமாகி வருகிறது. கொவிட்19, பல இடங்களில் பிஏ4, பிஏ5 போன்ற உருமாறிய வைரஸ்களால் இயக்கப்படுகிறது, 110 நாடுகளில் கொரோனா தொற்றுகள் அதிகரித்து வருகின்றன, இதனால் ஒட்டுமொத்த உலகளாவிய தொற்றுகள் 20 சதவீதம் அதிகரித்துள்ளன.

உலக சுகாதார நிறுவனத்தில் 6 பிராந்தியங்களில் 3 இல் இறப்புகள் அதிகரித்துள்ளன. அனைத்து நாடுகளும் தங்கள் மக்கள்தொகையில் குறைந்தது 70 சதவீதத்திற்கு தடுப்பூசி போடுமாறு அழைப்பு விடுத்துள்ளன, ஆனால் நூற்றுக்கணக்கான மில்லியன் மக்கள் தடுப்பூசி போடப்படாமல் உள்ளனர். அவர்கள் வைரஸின் எதிர்கால அலைகளால் மிகவும் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது எனக் கூறினார்.

# மாணவருக்கு மிகுந்த பயன் தரும் கணினி தொழில்நுட்பத் தமிழ் நூல்


தமிழ்நாட்டின் எஸ். ஆர். எம். வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் இயக்குனர் முனைவர் பா.சிதம்பரராஜன் மற்றும் கல்லூரியின் கணினி அறிவியல் பொறியியல் துறையின் உதவிப் பேராசிரியர் க.சண்முகம் ஆகியோர் இணைந்து எழுதிய 'எல்லாம் இணைய மயம்'(Internet of things concepts in Tamil) என்ற கணினித் தொழில்நுட்பத் தமிழ் நூலை எஸ்.ஆர்.எம் கல்வி குழுமங்களின் தலைவரும், எஸ்.ஆர்.எம் அறிவியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் இணைவேந்தருமான ரவி பச்சமுத்து அண்மையில் வெளியிட்டு தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்.


இந்நூலில் பொருட்களின் இணையம் பற்றிய தகவல் அடங்கிய தொழில்நுட்பத் தமிழ் நூல் ஆகும்.இந்நூலில் பொருட்களின் இணையத்தை எப்படி உருவாக்குவது?, இதன் முக்கியத்துவம், செயற்பாடுகள், வன்பொருள், மென்பொருள் மற்றும் இதன் பயன்பாடுகள் பற்றி தெளிவாக விளக்கமாக எடுத்துரைக்கப் பட்டுள்ளது.

பொருட்களின் இணையமானது, சட்ட அமுலாக்க செயற்பாடுகள், திறன் மிகுந்த வீடுகள் உருவாக்கம், வேளாண்மை, உடல்நல கவனிப்பு, ஊடகம், சந்தையிடுதல் மற்றும் விளம்பரம் செய்தல், சுற்றுச்சூழல் கண்காணிப்பு, கல்வி, மருத்துவம் ஆகியவற்றில் எவ்வாறு பயன்படுகிறது என்பதைப் பட விளக்கத்துடன் நூல் ஆசிரியர்கள் குறிப்பிட்டு எழுதியுள்ளனர்.

இந்த தொழில்நுட்ப தமிழ் நூலை ரவி பச்சமுத்து வெளியிட்டு, தனது வாழ்த்துரையில் தெரிவித்ததாவது;

"இவர்கள் இருவரும் இணைந்து முன்னரே சிறப்பாக எழுதிய 'வலை வாசல் வருக' தொழில்நுட்பத் தமிழ் நூல் மணவை முஸ்தபா நினைவு அறிவியல் தொழில்நுட்ப நூலுக்கான விருதைப் பெற்றுள்ளது. இதன் தொடர்ச்சியாக நிறைய தமிழில் தொழில்நுட்ப நூல்கள் உருவாக வேண்டும் என்ற எண்ணத்தை எண்ணியவாறு செய்து முடிக்கும் வகையில் இவர்களின் அடுத்த நூலாக 'எல்லாம் இணைய மயம்' என்ற தலைப்பில் பொருட்களின் இணையம் தொடர்பாக சிறப்பாக தொழில்நுட்பத் தமிழ் நூலை எழுதி உள்ளனர்.





இதுபோன்ற தமிழுக்கான முயற்சியை மேற்கொண்ட நூலாசிரியர்களான எஸ்.ஆர்.எம் வள்ளியம்மை பொறியியல் கல்லூரி இயக்குனர் மற்றும் பேராசிரியர் அவர்களுக்கு தனது மனமார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்" என்றார்.

இந்த நூலானது மாணவர்களுக்கு மட்டுமல்லாது, அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது எனவும் தனது வாழ்த்துரையில் அவர் தெரிவித்துக் கொண்டதுடன், இது போன்ற தொழில்நுட்ப தமிழ் நூல்கள் நிறைய உருவாக வேண்டும் என்று தனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்வில் எஸ்.ஆர்.எம் வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் முருகன் உட்பட பலரும் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தார்கள்.

அருள்நேசன்...

# தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மருந்துகள், உபகரணங்களை வழங்கிய தனியார் நிறுவனம்

இலங்கை தேசிய வைத்தியசாலையின் மருத்துவ தீவிர சிகிச்சைப் பிரிவினால் விடுக்கப்பட்டிருந்த மனிதாபிமான உதவிக் கோரிக்கையை ஏற்று இலங்கையின் INSEE Cement நிறுவனம் அதற்கு உதவியுள்ளது. noradrenaline குப்பிகள், CRRT கருவிகள், இரத்த வாயு cartridges, சென்சார் கார்டுகள், nasogastric குழாய்கள், சிறுநீர் வடிகுழாய்கள், 10 மிலீ syringes, தொற்றுநீக்கிய அறுவைச் சிகிச்சை கையுறைகள், பரிசோதனை கையுறைகள் மற்றும் உறிஞ்சும் சாடிகள் அடங்கலாக, அவசரமாகத் தேவைப்படும் அத்தியாவசிய மருந்துகள் மற்றும் உபகரணங்களை இந்நிறுவனம் வழங்கியுள்ளது.

இலங்கை தேசிய வைத்தியசாலையின் மருத்துவ தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு INSEE Cement வழங்கியுள்ள மருத்துவப் பொருட்கள் தற்போதைக்கு அதன் செயல்பாடுகளைத் தடையின்றி தொடர்ந்து முன்னெடுக்க உதவுகின்றன.

இந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில் இடம்பெற்ற எளிமையான வைபவத்தில், நிறுவனத்தின் பணிப்பாளர் சபைத் தலைவரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான நந்தன ஏக்கநாயக்க மற்றும் நிறுவனத்தின் வெளிவிவகாரங்களுக்கான தலைமை அதிகாரியான சந்தன நாணயக்கார ஆகியோர் இணைந்து இலங்கை தேசிய வைத்தியசாலையின் சார்பில் கலந்து கொண்ட வைத்தியர் டில்ஷான் பிரியங்கர, வைத்தியர் சஜீவக மற்றும் தாதிய பொறுப்பதிகாரியான திருமதி ஷிரோமி ஆகியோரிடம் மருத்துவப் பொருட்களை உத்தியோகபூர்வமாக கையளித்தனர்.



"இந்தச் சந்தர்ப்பத்தில் எங்கள் உதவியைக் கோருவதற்காக இலங்கை தேசிய வைத்தியசாலை எங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளது என்பதை அறிந்து கொள்வதில் நாங்கள் பெருமையடைகிறோம். இந்த வைத்தியசாலை முகங்கொடுக்கும் சிரமங்களை அறியப் பெற்ற உடனேயே, தேவையான மருத்துவப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளும் பணியை நாம் மிக விரைவாக முன்னெடுத்திருந்தோம். எவ்வாறாயினும், எங்களால் போதுமான மருத்துவப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடிந்ததற்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். அவை தற்போது வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளன. உயிர்களைக் காக்கும் முயற்சிக்கான உதவியில் பங்களிக்க முடிந்ததில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். தற்போதைய நெருக்கடியில் எங்களால் இயன்றதைச் செய்ய நாங்கள் ஆவலுடன் உள்ளோம்" என்று குறிப்பிட்டார்.

இந்நிறுவனம் சமூகங்களின் நல்வாழ்வு மற்றும் நாட்டின் தற்போதைய சூழ்நிலைக்கு உதவுவதில் உறுதிபூண்டுள்ளதுடன், பல்வேறு சமூக மற்றும் சுற்றுச்சூழல் நிலைபேற்றியல் செயற்திட்டங்களை முன்னெடுத்துள்ளது. உலகளாவிய தொற்றுநோயின் உச்சத்தின் போது, இந்நிறுவனம் போதுமான நோயாளர் படுக்கைகளை வழங்கியிருந்த அதே சமயத்தில் மருத்துவமனைகள் மற்றும் முன்களப் பணியாளர்களுக்கு அத்தியாவசிய பொருட்களை நன்கொடையாக வழங்கும் ஒரு விரிவான திட்டத்தையும் அறிமுகப்படுத்தியது. கண்டி தேசிய வைத்தியசாலையுடன் இணைந்து 150 படுக்கைகள் கொண்ட வைத்தியசாலை சிகிச்சைப் பிரிவை நிர்மாணிப்பதற்கு சீமெந்தை நன்கொடையாக அளித்து தேவையான தொழில்நுட்ப உதவிகளையும் வழங்கியது. வெலிசறை, ராகமை சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலை, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை மற்றும் திவுலப்பிட்டிய ஆதார வைத்தியசாலை உட்பட ஏனைய வைத்தியசாலைகளுக்கும் மேலும் பல சீமெந்து நன்கொடைகளும் உதவிகளும் வழங்கப்பட்டன.

# முகேஷ் அம்பானியின் மாதாந்த வருமானம்

பணம் பணத்தோடுதான் சேரும் என்பார்கள். அதேபோலத்தான் கோடீஸ்வரர்கள் மேலும் கோடீஸ்வரர் ஆகிக் கொண்டே செல்கிறார்கள். ஏழைகள் மேலும் ஏழ்மை நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

இதனை கடந்த கொரோனா காலத்திலேயே காண முடிந்தது. சாமானிய மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தினை இழந்து, அடிப்படை தேவைகளுக்கே கூட கஷ்டப்பட்டனர். ஆனால் இந்த காலகட்டத்திலும் பில்லியனர்கள் சொத்து பெரும் ஏற்றம் கண்டதாக கடந்த ஆண்டு ஆய்வறிக்கை ஒன்று சுட்டிக் காட்டியது.

பில்லியனர்கள் பல்வேறு காரணங்களுக்கு மத்தியில் பில்லியனர்களாகவே வாழ்கின்றனர். அவர்களின் வீடு, பயன்படுத்தும் கார்கள் என எல்லாமே சொகுசாக இருக்கும். ஆனால் மற்றவர்களோ பழைய வண்டியினை டயரை கூட மாற்ற முடியாமல் பேருந்தில் செல்ல வேண்டிய நிலை. இந்த ஏற்றத்தாழ்வுகள் குறையவே குறையாதா? எப்படி பணக்காரர்கள் மட்டும் சம்பாதிக்கிறார்கள். எப்போது என என்றேனும் யோசித்திருக்கிறீர்களா?

நாம் முதலில் பார்க்கவிருப்பது மார்க் ஜுக்கர்பெர்க். பேஸ்புக் நிறுவனத்தின் தலைவரான இவரின் சம்பளம் 1 டொலராகும். எனினும் பன்முகப்படுத்தப்பட்ட பங்குகளை கணக்கில் எடுத்துக் கொண்டால் அவரின் ஒரு மாத வருமான, 74.6 பில்லியன் டொலராகும்.



பங்குச் சந்தையின் தந்தை என்று உலகம் முழுக்க அறியப்படும் வாரன் பஃபெட், பங்கு சந்தை முதலீட்டில் பிரபலமானவர். முதலீட்டாளர் என்பதோடு மட்டும் அல்ல, சிறந்த தொழிலதிபர். பல புத்தகங்களை எழுதியவர். இப்படி பன்முகத்தன்மை கொண்ட இவரின் மாத வருமானம் எண்ணிக்கையற்றது.

சர்வதேச ஈகொமர்ஸ் நிறுவனத்தின் தலைவரான ஜெஃப் பெசோஸ், அமெரிக்காவின் மிகப் பெரிய தொழிலதிராவர். ஊடக உரிமையாளர் ஆவார். அதோடு சர்வதேச அளவில் முதலீடு செய்யும் மிகப்பெரிய முதலீட்டாளர் ஆவார். ஜெப் பெசோஸ் ப்ளூ ஆரிஜின் மற்றும் ஒரு விண்வெளி நிறுவனம் மற்றும் வாஷிங்டன் போஸ்டினையும் வைத்துள்ளார். இவரின் மாத வருமான 6.54 பில்லியன் டொலர்.

மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் நிறுவனரான பில்கேட்ஸ், மிகப்பெரிய தொழிலதிபர் ஆவார். எம்.எஸ்வின்டோஸ் என்னும் இயங்குதள அமைப்பானது இந்த நிறுவனத்தின் மிக வெற்றிகரமான மென்பொருளாகும். இவரின் மாத வருமானம் 330 டொலர்.

இந்தியாவின் பிரபல தொழிலதிபதிரான குமார் மங்கலம் பிர்லா, ஆதித்யா பிர்லா குழுமத்தின் தலைவராவர். இவரின் நிறுவனம் தற்போது சர்வதேச அளவில் 36 நாடுகளில் தனது வணிகத்தினை செய்து வருகின்றது. இவரின் மாத வருமானம் சுமார் 250 கோடி ரூபா.

(06ஆம் பக்கம் பார்க்க)

# ஜெர்மனியில் நடைபெற்ற ஜி-7 நாடுகள் மாநாட்டில் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற பிரதமர் மோடி

**ஜெர்மனியில் நடைபெற்ற ஜி 7 நாடுகளின் மாநாட்டில் பத்திரிகை, கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் வகையில் கொண்டு வரப்பட்ட 2022 உறுதியான ஜனநாயக அறிக்கையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கையெழுத்திட்டுள்ளார்.**

கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், பிரிட்டன், அமெரிக்கா ஆகிய 7 நாடுகளைக் கொண்ட ஜி7 கூட்டமைப்பின் மாநாடு ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றது. இதில் ஜி7 நாடுகள் மற்றும் இந்தியா, தென்னாபிரிக்கா உள்ளிட்ட நட்பு நாடுகள் கலந்து கொள்வது வழக்கம்.

ஜெர்மனியின் ஸ்க்லோஸ் எல்மாவில் ஜி7 நாடுகளின் மாநாடு கடந்த வாரம் நடைபெற்றது. இதற்காக கடந்த ஜூன் 26 ஆம் திகதி ஜெர்மனி சென்ற பிரதமர் நரேந்திர மோடி ஜி7 நாடுகளின் மாநாட்டில் கலந்து கொண்டார். இந்தக் கூட்டத்தில் சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் கருத்துரிமையை பாதுகாக்கும் வகையில் '2022 உறுதியான ஜனநாயக அறிக்கை' தாக்கல் செய்யப்பட்டது.

இந்த 4 பக்க அறிக்கையில், 'ஒடுக்குமுறை மற்றும் வன்முறையை எதிர்த்து நிற்கும் ஜனநாயக பாதுகாவலர்களை வாழ்த்துகிறோம். உலகளவில் ஜனநாயக சக்திகள் மேம்பட சர்வதேச அளவில் ஒத்துழைப்பை வழங்கும் பணிகளை தொடங்குவோம். நேரடியாகவும், இணையத்தள வாயிலாகவும் கருத்து சுதந்திரத்தைப் பாதுகாப்போம். ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும் காப்போம். தகவல் உரிமை ஜனநாயகத்தில் வெளிப்படையான விவாதங்களும், சுதந்திரமான பன்மைத்துவ ஊடகமும் அடங்கும் அனைத்து தகவல்களும் சட்டப்பூர்வமாகவும், வெளிப்படைத் தன்மையோடும், பொறுப்புணர்வுடனும் ஒன்லைனிலும், வெளியிலும் பொது மக்கள் மற்றும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு கிடைக்க வேண்டும்.

சுதந்திரமாக ஊடகங்கள் செயல்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். தடையற்ற, பாதுகாப்பான, இலவச இணையதள சேவைகள் கிடைக்கச் செய்ய வேண்டும். சைபர் குற்றங்கள் இல்லாத டிஜிட்டல் கட்டமைப்பை உருவாக்குவதுடன், சைபர் குற்றங்கள் தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். மனித உரிமை ஆர்வலர்கள், ஊழல்களை அம்பலப்படுத்துபவர்களை பாதுகாக்க வேண்டும்' என்பன போன்ற பல தீர்மானங்கள் உள்ளன.

இந்த அறிக்கையை ஜெர்மனி, ஆர்ஜெண்டீனா, கனடா, பிரான்ஸ், இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், செனெகல், தென்னாபிரிக்கா, பிரிட்டன், அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் ஆகியவை கூட்டாக வெளியிட்டுள்ளன.

ஜி7 உச்சி மாநாட்டில் பங்கேற்க ஜெர்மனி சென்றிருந்த பிரதமர் மோடி, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை சந்தித்துப் பேசினார். அதேவேளை ஜெர்மனியின் முனிச் நகரில் இந்திய வம்சாவளியினர் மத்தியில் பிரதமர் மோடி உரையாற்றினார்.

பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மேக்ரான், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஆகியோரையும் சந்தித்து சிறிது நேரம் உரையாடினார். இதன்பிறகு ஜி 7 நாடுகளின் தலைவர்கள் குழு புகைப்படமும் எடுத்துக் கொண்டனர்.

கடந்த மே மாதம் ஜப்பானில் நடைபெற்ற குவாட் மாநாட்டிற்குப் பிறகு பிரதமர் மோடியும் ஜோ பைடனும் சந்தித்துத்துக் கொள்வது இதுவே முதல் முறையாகும்.

இம்மாதம் காணொலி வாயிலாக I2U2 உச்சி மாநாட்டிலும் இரு தலைவர்களும் சந்திக்க உள்ளனர். I2U2 காணொலி உச்சி மாநாட்டில் இந்தியா, இஸ்ரேல், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் அமெரிக்கா ஆகிய நான்கு நாடுகள் பங்கேற்கின்றன.

ஜெர்மனியில் நடைபெற்ற ஜி7 மாநாட்டில் சிறப்பு அழைப்பாளராக பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றிருந்தார். ஜெர்மனியின் ஸ்க்லோஸ் எல்மாவ் நகரில் 2 நாட்கள் ஜி7 மாநாடு நடைபெற்றது.



இந்த உச்சிமாநாட்டில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொள்ள பிரதமர் நரேந்திர மோடிக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஜெர்மனி பிரதமர் ஒலாப் ஸ்கால்ப் அந்நாட்டின் பாரம்பரிய முறைப்படி மோடியை வரவேற்றார். இதேபோல் பிற நாட்டுத் தலைவர்களும் வரவேற்கப்பட்டனர். முன்னதாக குழு புகைப்படத்தின் போது அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடன் பிரதமர் நரேந்திர மோடியை நோக்கி நடந்து வந்தார். பிறகு பிரதமர் நரேந்திர மோடியின் தோளை தட்டி அழைத்தார். நரேந்திர மோடி திரும்பிப் பார்க்கவே கையை நீட்டி ஜோபைடன் பிரதமர் நரேந்திர மோடிக்கு வாழ்த்துத் தெரிவித்தார். பிரதமர் நரேந்திர மோடியும் ஜோபைடனின் தோளை தட்டி வாழ்த்துத் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் பொருளாதார வளர்ச்சி, பணவீக்கம், உணவுப் பொருட்களின் பற்றாக்குறை உட்பட நாடுகள் சந்திக்கும் சவால்கள் பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டது. மேலும், இந்தப் பிரச்சினையை அனைவரும் ஒன்றிணைந்து எதிர்கொள்ள வேண்டும். இந்த விஷயத்தில் அனைவரும் இணைந்து ஒரே குழுவாக செயல்பட வேண்டும் என தலைவர்கள் பேசிக் கொண்டனர். மேலும் இந்தியாஜெர்மனி இடையே வணிகம், எரிசக்தி ஒப்பந்தம் குறித்தும் பேசப்பட்டது. இதேபோல் பிரதமர் நரேந்திர மோடி ஜி7 நாடுகளின் தலைவர்களை சந்தித்து நாடுகள் இடையேயான உறவு குறித்து விவாதித்தார்.



உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்த இலங்கைக்கு இந்தியா உதவுவதாக மோடி கூறியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.G7 உச்சிமாநாட்டில் கலந்துகொண்ட மற்ற நாட்டு தலைவர்களுக்கு பிரதமர் மோடி இந்தியாவின் கலைநயத்தை வெளிப்படுத்தும் விதமாக ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக அன்புப் பரிசுகளை வழங்கினார்.

இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட பல்வேறு கலை மற்றும் கைவினைப் பொருட்களை பரிசாக வழங்கினார். ஜி7 மாநாட்டின் 2வது நாள் நிகழ்ச்சிகளில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார். பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்ற பருவநிலை மாறுபாடு, எரிசக்தி, சுகாதாரம் தொடர்பான அமர்வில் அவர் கலந்து கொண்டார். பின்னர் மாலை 6.30 மணிக்கு நடந்த உணவுப் பாதுகாப்பு, பாலின சமநிலை குறித்த அமர்விலும் அவர் பங்கேற்றார்.

இந்த அமர்வுகளில் பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது:

"உலகின் மக்கள் தொகையில் 17 சதவீதம் பேர் இந்தியாவில் வசிக்கின்றனர். எனினும் கரியமில வாயு வெளியேற்றத்தில் இந்தியாவின் பங்கு 5 சதவீதம் மட்டுமே. வளரும் நாடுகள் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்று குற்றம் சாட்டப்படுகிறது. இந்தியாவைப் பொறுத்தவரை ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இயற்கையை பேணிப் பாதுகாத்து வருகிறோம்.

இந்த பசுமை முயற்சி தற்போது மேலும் தீவிரமடைந்துள்ளது. இந்தியாவின் அனைத்து வீடுகளுக்கும் சமையல் எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மின்சாரத்தை சேமிக்க எல்.இ.டி விளக்குகள் பயன்படுத்தப்படுகின்றன. உலகின் முதல் சூரியசக்தி விமான நிலையம் இந்தியாவில் உள்ளது. பருவநிலை மாறுபாட்டை தடுத்து சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் இந்தியா முன்னோடியாக இருக்கும்".

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த மாநாட்டின்போது ஜெர்மனி பிரதமர் ஒலாப் ஸ்கால்ஸை, பிரதமர் நரேந்திர மோடி சந்தித்தார். இரு தலைவர்களும் அரை மணி நேரம் முக்கிய பேச்சுவார்த்தை நடத்தினர். உக்ரைன் விவகாரம், இருநாட்டு பொருளாதார உறவை மேம்படுத்துவது குறித்து இருவரும் பேசினர்.

ஜி7 மாநாட்டில் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்கி காணொலி வாயிலாக பங்கேற்றார். உக்ரைனுக்கு தாமதமின்றி ஆயுதங்களை வழங்க வேண்டும். ரஷ்யா மீது மிகக் கடுமையான பொருளாதார தடைகளை விதிக்க வேண்டும். அப்போதுதான் போரை முடிவுக்கு கொண்டுவர முடியும் என்று ஜெலன்கி கூறியதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஜெர்மனியில் இருந்து டெல்லி திரும்பும் வழியில் பிரதமர் நரேந்திர மோடி ஐக்கிய அரபு அமீரக தலைநகர் அபுதாபிக்கு சென்றார். அங்கு நடைபெறும் மறைந்த முன்னாள் அதிபர் ஷேக் கலீபா பின் சயீத் அல் நஹ்யானின் இரங்கல் நிகழ்ச்சியில் அவர் பங்கேற்றார்.

# உணவு நெருக்கடியை வெற்றி கொள்வதாயின் வீட்டுத் தோட்டச் செய்கையே சிறந்த தீர்வு

**நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக மக்கள் அதிகம் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். செலவுக்கேற்ப போதியளவு வருமானமின்றிப் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் அன்றாட உணவுக்கு வழியின்றி சிரமம், அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர். தற்போதைய நிலையை விடவும் மோசமான நிலைமைகளை எதிர்வரும் காலங்களில் எதிர்கொள்ள நேரிடும் என்று பொருளாதார வல்லுனர்கள் எச்சரித்து வருகின்றனர். ஆகையால், நாங்கள் எதிர்காலம் குறித்து அவசரமாக சிந்தித்து, பணிகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும்.**

மரக்கறிகளின் விலைகள் என்றுமில்லாதவாறு அண்மைக் காலத்தில் அதிகரித்துக் காணப்படுகின்றன. விலை அதிகரிப்புக் காரணமாக நாட்டு மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். எரிபொருள் விலையேற்றம் நிலைமைகளை மேலும் மோசமாக்கியுள்ளதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.





## செய்கையாளர்களை ஊக்குவிப்பதில் அக்கறை செலுத்துவது அவசியம்

மலைநாட்டு காய்கறிகளான போஞ்சி, கரட், பீற்றூட், உருளைக் கிழங்கு, கறிமிளகாய், தேசிக் காய், தக்காளி என்பனவற்றின் விலைகள் என்றுமில்லாதவாறு உயர்ந்துள்ளன. ஒரு கிலோகிராம் ஆங்கில மரக்கறி 600 ரூபா வரை அதிகரித்துள்ளது.

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும், கத்தரி, வெண்டி, பயற்றை, அவரை, பாகல், புடோல், பீர்க்கு, கீரை, இலைக்கறி வகைகள் என்பனவும் அதிகரித்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அண்மைய விலை அதிகரிப்புக் காரணமாக நுகர்வோர் காய்கறிகளின் கொள்வனவை பெருமளவு தவிர்த்து கொண்டுள்ளதுடன், கொள்வனவின் அளவையும் கணிசமானளவு குறைத்துள்ளதாகத் தெரிவிக்கின்றனர். இது மிகவும் ஆபத்தான நிலையாகும். போஷாக்குக் குறைவுக்கு வழிவகுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மரக்கறி விற்பனை வீழ்ச்சி காரணமாக, மரக்கறிகளை ஊருக்குள் மக்கள் காலடிக்கு கொண்டு வந்து, வீதி, வீதியாக கூவி விற்பனை செய்யும் சிறியளவிலான வியாபாரிகள் வியாபாரத்தை முழுமையாக கைவிட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

பொருளாதார நெருக்கடி, திடீர் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, எரிபொருள் விலையேற்றம் மற்றும் தட்டுப்பாடு, அதிகரித்த உற்பத்திச் செலவு, தற்போது நாடளாவிய ரீதியில் நிலவும் மழைக்காலநிலை என்பன விலை ஏற்றத்திற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. எதிர்காலத்தில் பொருட்களின் விலைகள் மேலும் அதிகரிக்கும் என வர்த்தகர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

ஆகையால், மேட்டுநிலப் பயிர்ச் செய்கை மற்றும் வீட்டுத் தோட்டச் செய்கையை ஊக்குவிக்க வேண்டிய அவசர தேவை எழுந்துள்ளது. இதன் மூலம் குடும்பங்களின் தினசரி உணவுத் தேவையை ஓரளவுக்கேனும் நிவர்த்திக்கலாம் என்பது அதிகமானவர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

உபஉணவு பயிர்ச் செய்கை மிகவும் இலாபம் நிறைந்தது. ஒன்றுக்கு மூன்று மடங்கில் இலாபமீட்ட முடியும் என விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர். அம்பாறை மாவட்டத்தில் கடந்த காலங்களில் மேட்டுநில பயிர்ச் செய்கையாளர்கள் அறுவடையின் போது, அமோக விளைச்சல் பெற்றுக் கொண்டதுடன் சிறந்த இலாபமீட்டியமையும் வரலாறாகும்.

பல்வேறு மகுட வாசகங்களின் கீழ், நாடளாவிய ரீதியில் வீட்டுத் தோட்ட உபஉணவு பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை தெரிந்ததே. இதனால், சிறியளவில் வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபட்டுவந்த மக்களில் பலர் இன்று பாரியளவிலான செய்கையில் ஆர்வம் செலுத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

நாடளாவிய ரீதியில் 10 இலட்சம் வீட்டுத் தோட்டங்களை உருவாக்கும் அரசின் 'சௌபாக்கியா' வேலைத்திட்டத்தின் கீழ், அம்பாறை மாவட்ட மக்களுக்கு வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கைக்கான விதைகள் கடந்த காலங்களில் வழங்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு, விவசாயத் திணைக்களம், மகாவலி அதிகார சபை என்பன இணைந்து எதிர்காலத்தில் ஏற்படவுள்ள உணவுத் தேவையை வெற்றி கொள்ளல், எதிர்காலத்திற்குத் தேவையான விதைகளை தாங்களே உற்பத்தி செய்து கொள்ளல், மேலதிக வருமானத்தைப் பெற்றுக் கொள்ளல் போன்ற இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் மரக்கறி மற்றும் உப உணவுப் பயிர் விதைகள் விநியோகிக்கப்பட்டன. விவசாய விரிவாக்கல் நிலையங்கள் இப்பணியை பிரதேச ரீதியாக வெற்றிகரமாக முன்னெடுத்து வந்தன. வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கையாளர்கள் மற்றும் நெற்காணி வரம்புகளில் மரக்கறிச் செய்கையில்ஆர்வமுள்ளவர்கள் ஆகியோர் இதன் மூலம் பெருமளவில் நன்மையடைந்தனர்.

தற்காலத்தில், வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கையாளர்கள் தங்களுக்குத் தேவையான பயிர் விதைகள், பயிர்ச் செடிகளைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர். விவசாய விரிவாக்கல் நிலையங்களில் இதற்கான தட்டுப்பாடு நிலவுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. இதனால், மக்கள் தனியாரை நாடி, தரக்குறைவான விதைகள், நாற்றுக்களை பெற வேண்டிய தேவையேற்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் அனைத்துப் பிரதேசங்களிலும் காய்கறி, கிழங்கு, பழச்செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். ஆகையால், ஆர்வமுள்ள உற்பத்தியாளர்களுக்கு பயிர் விதைகள், நாற்றுக்களை விவசாயத் திணைக்களத்தினூடாகப் பெற்றுக் கொடுப்பதில் சம்பந்தப்பட்டவர்கள் ஒருபோதும் பின்னிற்காது, உத்வேகத்துடன் தொழிற்பட வேண்டும். இதுவே வீட்டத் தோட்டச் செய்கையாளர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

முகம்மட் றிஸான்...
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

# இலங்கையில் உள்ள அருங்காட்சியகங்கள், கலைக்கூடங்களின் நிபுணர்களுக்கு பயிற்சி

**நவீன மற்றும் சமகாலக்கலைக்கான இலங்கை அருங்காட்சியகம் (இலங்கை MMCA), கல்வியை முதன்மைப்படுத்தும் ஒரு முன்முயற்சியாகும். பொதுமக்கள், பாடசாலைகள் மற்றும் சுற்றுலா பயணிகளின் நலன் மற்றும் மகிழ்ச்சிக்காக, நவீன மற்றும் சமகால கலைகளின் காட்சி, ஆராய்ச்சி, சேகரிப்பு மற்றும் பாதுகாப்பிற்காக அர்ப்பணிக்கப்பட்ட பொது அருங்காட்சியகத்தை நிறுவுவதே இதன் நோக்கமாக உள்ளது.**

இலங்கையின் அருங்காட்சியகத் துறையில் தொழில்சார் மேம்பாட்டிற்கான நிலப்பரப்பைப் பற்றிய ஆய்வொன்றை, 2021ஆம் ஆண்டில் இலங்கையில் உள்ள நெதர்லாந்து தூதரகத்தின் நிதியுதவியுடன், இலங்கை MMCA நடத்தியது. கண்காட்சியின் வடிவமைப்பு, பொது நிகழ்ச்சிகள் மற்றும் சமூக ஊடகங்கள் எவ்வாறு பார்வையாளர்களின் அனுபவத்திற்கு பங்களிக்கின்றன என்பதை இந்த ஆய்வு எடுத்து காட்டியது.

இலங்கையில் உள்ள அருங்காட்சியகங்கள் மற்றும் கலை தொகுப்பு சார்ந்த கலாசார நிறுவனங்களில் உள்ள நிபுணர்களுக்காக, 'Museum Intensives' (MI) என்ற ஆழ்ந்த பயிற்சி தொடரை இலங்கை MMCA ஏற்பாடு செய்துள்ளது. நெதர்லாந்து தூதரகத்தின் தொடர்ச்சியான நிதியுதவியின் ஆதரவினால், இலங்கை MMCAயானது இரண்டு முதன்மை பங்காளிகளுடன் நெதர்லாந்தின் கலாசார மரபு நிறுவனம் (Cultural Heritage Agency of the NetherlandsRCE), மற்றும் ரயின்வார்ட் கலைக் கூடம் (Reinwardt Academy) இணைந்து, முதலாவது MI பயிற்சியை நடத்தவுள்ளது.

இலங்கையில் உள்ள நெதர்லாந்து இராச்சியத்துக்கான தூதுவர் டானியா கொன்கிறைப்,



இந்த நிகழ்ச்சியைப் பற்றிப் பேசுகையில், "இந்த முன்மாதிரியான முயற்சியில் இலங்கை MMCAயுடன் கூட்டாளராக செயற்பட தூதரகம் மகிழ்ச்சி அடைவதோடு, பெருமிதம் கொள்கிறது. வரலாறு, பாரம்பரியம் மற்றும் சமகால, நவீன கலைப்படைப்புகள் நிறைந்த ஒரு சிறப்பான கலாசாரத்தை இலங்கை கொண்டுள்ளது. MI பயிற்சியானது, இந்த இரண்டையும் ஒன்றிணைப்பதுடன், இலங்கை மற்றும் நெதர்லாந்திலுள்ள தொழில்முறை நிபுணர்களை இவற்றில் ஈடுபடுத்தவும் உதவும்" என்றார்.

தொழில்முறை நிபுணர்கள் இணைந்து, பிறரிடமிருந்து கற்றுக்கொண்டு, பொதுவான சவால்களுக்கான தீர்வுகளைக் கண்டறிவதற்காக அறிவை மேம்படுத்தக்கூடிய, பாரம்பரிய சொத்துகளுக்கான ஒரு உலகளாவிய சமூகத்தை உருவாக்குவதே, சர்வதேச பாரம்பரிய சொத்துகளுக்கான ஒத்துழைப்புத் திட்டத்தின் நோக்கமாகும். "MI ஆனது, நீண்ட கால ஒத்துழைப்பின் தொடக்கமாக இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்," என கலைத் தொகுப்புக்களுக்கு தலைவரான யோலண்டா எஸெண்டாம் குறிப்பிட்டார்.

நெதர்லாந்தில் உள்ள ஆம்ஸ்டர்டாம் கலை பல்கலைக்கழகமானது, உலகில் அருங்காட்சியகம் மற்றும் பாரம்பரிய சொத்துக்கள் சம்பந்தமான சர்வதேச துறையில் ஈடுபடும் மிகப் பழமையான பல்கலைக்கழகங்களில் இரண்டாவதாக உள்ளது. இப் பல்கலைக்கழகத்தில், கலாச்சார பாரம்பரிய சொத்துக்களுக்கான பீடத்திலேயே ரயின்வார்ட் கலைக்கூடம் அமைந்துள்ளது. ரயின்வார்ட் கலைக்கூடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும் சர்வதேச நிகழ்ச்சிகளுக்கு முகாமையாளருமான ரூபன் ஸ்மிட், இலங்கை MMCAயின் முயற்சிகளைக் குறித்து பின்வருமாறு கூறினார்: "நாம் இன்று வாழ்கின்ற காலங்களுக்கு ஏற்றவாறு ஒரு அருங்காட்சியகத்தை நடத்துவதில் இலங்கை MMCAயின் அணி சிறந்த நிபுணத்துவம் பெற்றுள்ளது. அவர்களின் அர்ப்பணிப்பு, அறிவு, உற்சாகம் ஆகியன மிகச் சிறப்பானவை. பயிற்சித் திட்டம் மிகவும் வெற்றிகரமாக இருக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்."

முதலாவது ஆழ்ந்த அருங்காட்சியக பயிற்சியை (MI), கொழும்பில் (இலங்கை) 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இலங்கை MMCAயின் தலைமைக் கண்காணிப்பாளர், ஷார்மினி பெரேரா கருத்து தெரிவிக்கையில், "புதிதாக உருவெடுக்கும் ஒரு அருங்காட்சியகம் என்ற வகையில், நாம் எவ்வாறு எம்மைச் சூழ்ந்துள்ள சமூகங்களுக்குப் ஏற்புடையதாக இருக்கலாம் என்று பார்த்துக் கற்றுக்கொள்வதில் எங்களுடைய முதல் சில வருடங்களை செலவிட்டுள்ளோம்" என்றார்.

இலங்கை MMCAயானது, தொகுக்கப்பட்ட கண்காட்சிகள் மற்றும் கல்வி நிகழ்ச்சிகளை வழங்குவதன் மூலம், இலங்கையில் பொதுமக்கள் அணுகக்கூடிய முதல் மும்மொழி அரங்கமாகும். மேலதிக தகவலுக்கு, இணையதளம் மூலம் www.mmcasrilanka.org; அல்லது முகநூலில் (Facebook) www.facebook.com/mmcasrilanka; மற்றும் படவரியில் (Instagram) https://www.instagram.com/mmcasrilanka; இலங்கை MMCAஐப் பின்தொடர முடியும்.

ஆழ்ந்த அருங்காட்சியகப் பயிற்சி தொடரைப் (MI) பற்றிய தகவலுக்கு, info@mmcasrilanka.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதலாம்.




முல்லைத்தீவு நகர் பகுதியிலுள்ள கரைத்துறைபற்று பல நோக்கு கூட்டுறவு சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு பெற்றோல் வருவதாக கிடைத்த தகவலையடுத்து பெற்றோல் பெற்றுக் கொள்ள மக்கள் மிக நீண்ட வரிசையில் காத்திருந்த போது,...
படம்: மாங்குளம் குறூப் நிருபர்

# நாட்டுக்கு வருகை தரும் விமானங்கள்: மீள புறப்படுவதற்கான எரிபொருளை எடுத்துவருமாறு சர்வதேச விமான நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி நிலையை கருத்திற் கொண்டு நாட்டுக்கு வருகை தரும் விமானங்கள் இலங்கையிலிருந்து மீண்டும் பயணத்தை ஆரம்பிப்பதற்காக போதிய எரிபொருளை எடுத்து வருமாறு சர்வதேச விமான நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் தலைவர் ஜீ.ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், எரிபொருள் நெருக்கடி நிலைவும் இத்தகைய சூழ்நிலையிலும் தினமும் சுமார் 105 விமானங்கள் நாட்டுக்கு வருவதுடன் அவை நாட்டிலிருந்து புறப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அதற்கிணங்க தினமும் குறைந்தபட்சம் 10,000 விமானப் பயணிகள் நாட்டுக்கு வருகை தருவதும் நாட்டிலிருந்து புறப்படுவதும் இடம்பெற்று வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக சேவைக்கு அழைக்கும் ஊழியர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர், நாட்டில் தற்போது கையிலிருப்பிலுள்ள விமானங்களுக்கான எரிபொருள் 800 மெற்றிக் தொன்னாக குறைவடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சைக்கிள் திருட்டு அதிகரிப்பு மக்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

ஒலுவில் விசேட நிருபர்

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் அண்மைக்காலமாக துவிச்சக்கரவண்டி திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து காணப்படுவதால் பொது மக்கள் அவதானமாக இருக்குமாறு அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பெரும் குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் எம்.எஸ். அப்துல் மஜீட் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மக்கள் மத்தியில் தற்போது துவிச்சக்கர வண்டியின் பாவனை அதிகரித்துக் காணப்படுகின்றது.

பாதை ஓரங்கள், பொது இடங்கள் மற்றும் வியாபார நிலையங்களில் நிறுத்தி வைக்கப்படும் துவிச்சக்கர வண்டிகளை அதன் உரிமையாளர்கள் பாதுகாப்பான முறையில் வைக்குமாறு கேட்டுள்ளார்.

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை, ஆலையடிவேம்பு ஆகிய பிரதேசங்களில் துவிச்சக்கரவண்டி திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து காணப்படுவதாக பொலிஸ் நிலையத்தில் அதிகமான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதேவேளை துவிச்சக்கரவண்டி காணாமல் போனால் உடனடியாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யும் பட்சத்தில் திருடனை உடனடியாக கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

## செவ்வாய், புதன் வியாழன்...

மாட்டாதென்பது குறிப்பிடத்தக்கது. தற்போதைய சூழ்நிலையை கவனத்தில் கொள்ளும் அதேநேரம், எமது விசா சேவையை பெற்றுக் கொள்ளும் இலங்கை மற்றும் ஏனைய நாடுகளைச் சேர்ந்த பிரஜைகளின் சௌகரியங்களுக்கு முக்கியத்துவமளித்தும், இப்புதிய நடைமுறை முன்னெடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத் தினங்கள் உயர் ஸ்தானிகராலயத்தினால் அறிவிக்கப்பட்டிருக்கும் விடுமுறை நாட்களாக இருந்தால் அத் தினங்களிலும் எதுவிதமான சேவைகளும் நடைபெறமாட்டாது.

சகல விசா விண்ணப்பதாரிகளும் முற்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளும்படி வேண்டப்படுவதுடன் மறு அறிவித்தல் வரையில் விசா விண்ணப்பங்களை மேலே கூறப்பட்ட தினங்களில் மாத்திரம் IVS நிலையத்தில் சமர்ப்பிக்கவும்.

## தாயும் மகளும் பலி; 11 வயது...

சேர்ந்தவர் என்றும் எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அவர் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். அவரது 11 வயது மகன் சிறந்த உடல் நிலையுடன் காணப்படுவதாகவும் எனினும் ஐந்து வயது சிறுமி மரணமடைந்துள்ளதாகவும் வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி பெண்ணின் கணவர் அம்பேகமுவ பிரதேசத்திற்கு தொழிலுக்காக சென்றுள்ள நிலையில் தற்கொலை முயற்சிக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மரணமடைந்துள்ள குறித்த பெண் மணியின் பெயர் சுரங்கிகா மதுமாலி என்றும் காப்பாற்றப்பட்டுள்ள 11 வயது மகனின் பெயர் சாம் துஷ்மந்த என்றும் மரணமடைந்துள்ள சிறுமி நெதும் நெத்மாலி என்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## சர்வ கட்சி அரசாங்கத்தை அமைக்குமாறு...

கோரியே மகாநாயக்க தேரர்கள் கையெழுத்திட்ட கடிதம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க சர்வ கட்சி அரசாங்கத்தை உருவாக்கும் போது ஜனாதிபதி மற்றும் அனைத்து கட்சித் தலைவர்களும் இணக்கம் காண வேண்டிய விடயங்கள் அடங்கிய மகஜர் ஒன்றும் மகாநாயக்க தேரர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரதன்மையை நாட்டில் ஏற்படுத்தி மக்களின் இயல்பு வாழ்க்கையை பாதுகாப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.(ஸ)

## பாராளுமன்ற அமர்வுகள் மூன்று...

அதேவேளை எரிபொருள் நெருக்கடி நிலையை கருத்திற்கொண்டு கடந்த பாராளுமன்ற அமர்வுகளும் இரண்டு தினங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டமைச்சின் கொன்சியூலர் பிரிவு...

பெற்றுக் கொடுக்கும் நோக்கிலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அதற்கிணங்க யாழ்ப்பாணம்,கண்டி, திருகோணமலை, மாத்தறை மற்றும் குருணாகல் பிரதேசங்களில் செயல்படும் கொன்சியூலர் அலுவலகங்களும் வாரத்தின் அனைத்து நாட்களும் திறக்கப்படவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## மே 9 ஆம் திகதி வன்முறை...

அவர்களில் 1,150 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## அரச அச்சக கூட்டுத்தாபனத்தில்...

10 மணிக்கு இந்த உத்தியோகபூர்வ நிகழ்வு நடைபெறவுள்ளதாக கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜே.எம். யூ.பி. ஜயசேக்கர தெரிவித்துள்ளார்.

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் கடந்த 54 வருடங்களாக பாடசாலை புத்தகங்களை அச்சிட்டு வருவதுடன் 4.2 மில்லியன் பாடசாலை மாணவர்களுக்காக தேவையான பாடநூல்களை அச்சிட்டு வழங்கி வருகிறது. அந்த நடவடிக்கைகளை விரைவுபடுத்தும் வகையிலேயே அரசாங்கத்தின் அனுசரணையுடன் மேற்படி நவீன அச்சியந்திரம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஏஞ்சலோ மெத்யூஸுக்கு...

பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டதாக ஸ்ரீ லங்கா கிரிக்கெட் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், கொரோனா விதிமுறைகளைப் பின்பற்றி வருவதாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

காலியில் இடம்பெற்றுவரும் அவுஸ்திரேலிய – இலங்கை அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரில் அவர் விளையாடியிருந்தார். நேற்று முன்தினம் இலங்கை அணி தனது முதலாவது இன்னிங்ஸுக்காக துடுப்பாடியபோது, ஏஞ்சலோ மெத்யூஸும் அணியில் இடம்பெற்றிருந்தார்

இந்த நிலையில், தற்போது அவருக்கு பதிலாக ஓஷத பெர்னாண்டோ அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக ஸ்ரீ லங்கா கிரிக்கெட் தெரிவித்துள்ளது.

## இலங்கைக்கு ஜப்பான் ஒத்துழைப்பு...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் நேற்று நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இலங்கையுடனான பொருளாதார, சமூக மற்றும் கலாசார உறவுகளை தொடர்ந்து பேணுவதாகவும் ஹிடேகி மிசுகோஷி தெரிவித்தார்.

இலங்கைக்கு ஜப்பான் வழங்கிய ஆதரவுக்கு ஜனாதிபதி தூதுவருக்கு தமது நன்றியைத் தெரிவித்தார்.

## ஜனாதிபதியின் விசேட...

அப்துல்லாஹ் ஏ.ஏ. ஓர்கோபி, வெளிநாட்டமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸை நேற்று அமைச்சு அலுவலகத்தில் சந்தித்தார். இதன்போதே இவ்வாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இச்சந்திப்பில், எரிபொருள் தட்டுப்பாடு உள்ளிட்ட தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் இலங்கையின் அனைத்து துறைகளிலும் அதன் பாதகமான பாதிப்புக்கள் குறித்தும் வெளிநாட்டமைச்சர் பீரிஸ் அவருக்கு விளக்கமளித்தார்.

இலங்கை சவூதி இருதரப்பு உறவுகளுக்கு முக்கியத்துவம் அளித்து, இந்த நேரத்தில் இலங்கைக்கு சாத்தியமான அனைத்து ஆதரவுகளையும் நல்குவதாக சவூதி அரேபியத் தூதரகத்தின் பொறுப்பாளர் ஓர்கோபி உறுதியளித்தார்.

## இலங்கைக்கு ஒத்துழைப்பு... (03ஆம் பக்கத் தொடர்)

தெரிவித்தார். ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி அநுர திஸாநாயக்கவும் இச்சந்தர்ப்பத்தில் கலந்து கொண்டார்.

## த.தேசிய பண்பாட்டு ... (03ஆம் பக்கத் தொடர்)

அண்மையில் முல்லைத்தீவில் இடம்பெற்ற பாலியல் குற்றங்களுக்கு தண்டனைகள் வழங்கப்பட்ட வேண்டுமென்பது தொடர்பிலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்கள் மத்தியில் செயற்படாமை தொடர்பிலும் அண்மையில் அவர் கருத்து தெரிவித்ததால் இது திட்டமிட்டு நடத்தப்பட்ட தாக்குதலாக இருக்கலாமென தான் சந்தேகிப்பதாக தமிழ்த் தேசிய பண்பாட்டு பேரவையின் ஒருங்கிணைப்பாளர் நிஷாந்தன் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

## நான்கு வயது குழந்தை... (03ஆம் பக்கத் தொடர்)

வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் பத்மினி அபேசிங்க தெரிவிக்கையில், நோயாளிக்கு சிகிச்சை அளிப்பதில் எவ்வித தாமதமும் ஏற்படவில்லை என தெரிவித்துள்ளார்.

## வைத்தியரின் மோட்டார்... (03ஆம் பக்கத் தொடர்)

இந்நிலையில் சந்தேகநபர் போத்தல் ஒன்றில் மோட்டார் சைக்கிளிலிருந்த எரிபொருளை நிரப்பிக் கொண்டிருந்த போது, வைத்தியசாலை காவலர்களிடம் கையும் களவுமாக சிக்கியுள்ளார்.

சந்தேக நபர் கண்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அவர் இதற்கு முன்னரும் பல தடவைகள் இவ்வாறான எரிபொருள் திருட்டில் ஈடுபட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

## 480 கிலோ கடல் ... (03ஆம் பக்கத் தொடர்)

பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக வனத்துறை அதிகாரிகளுக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து அப்பகுதிக்கு விரைந்து சென்ற வனத்துறையினர் இலங்கைக்கு கடத்துவதற்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த சுமார் 480 கிலோ எடை கொண்ட கடல் அட்டையை பறிமுதல் செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும் பறிமுதல் செய்யப்பட்ட கடல் அட்டையில் சர்வதேச மதிப்பு 50 இலட்சம் என வனத்துறை தெரிவித்துள்ளது.

## முகேஷ் அம்பானியின்... (04ஆம் பக்கத் தொடர்)

இந்தியாவின் மருத்துவத் துறையின் முன்னணி தொழிலதிபதிரான சைரஸ் பூன்வல்லா, சீரம் இன்ஸ்டிடியூட்டின் தலைவராவர். கொரோனாவின் வருகைக்கு பிறகு இவரின் வருவாய் இன்னும் கணிசமாக உயர்ந்துள்ளது எனலாம். இவரின் மாத வருமானம் சுமார் 2000 கோடி ரூபாய்க்கு மேல்.

இந்தியாவின் வளர்ந்து வரும் மிகப்பெரிய தொழிலதிபரான கௌதம் அதானி, பல்வேறு வணிகங்களை செய்து வருகின்றார். இந்தியாவின் பெரும் பணக்காரர்களில் ஒருவரான அதானி, அதானி குழுமத்தின் தலைவராவர். ஃபோர்ப்ஸ் பத்திரிக்கையின் ரியல் டைம் பில்லியனர் பட்டியலின்படி, 5வது மிகப் பெரிய பில்லியனர் ஆவார். இவரின் மாத வருமானம் சுமார் 15,000 கோடி ரூபா.

ஆசியாவின் முதல் பணக்காரரும், இந்தியாவின் சிறந்த தொழிலதிபரான முகேஷ் அம்பானி ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் தலைவராவர். தற்போது தனது வணிகத்தினை தனது வாரிசுகள் கைக்கு மாற்ற தொடங்கியுள்ள நிலையில் முகேஷ் அம்பானியின் மாத வருமானம் சுமார் 4000 கோடி ரூபா.

## மாணவர்களை ஏற்றிச்சென்ற ...

விபத்துக்குள்ளான லொறியில் 37 பாடசாலை மாணவர்கள் பயணித்துள்ள நிலையில் அவர்களின் 13 பேர் காயமடைந்துள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

பிரதேசவாசிகளின் ஒத்துழைப்புடன் காயமுற்ற சிறுவர்கள் கலன்பிந்துனுவெவ போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் அதனையடுத்து மூன்று மாணவர்கள் மேலதிக சிகிச்சைகளுக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்துள்ள பாடசாலை மாணவர்கள் தொடர்பில் தெரிவித்துள்ள கலன்பிந்துனுவெவ வைத்தியசாலையின் அதிகாரி:

காயமடைந்துள்ள ஒரு மாணவரின் கால் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேற்படி விபத்து சம்பவம் தொடர்பில் கலன்பிந்துனுவெவ பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட...

தெரிவித்துள்ளார். உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் மூலம் கிடைக்கும் உதவிகளை பயன்படுத்தி மேற்படி 32 இலட்சம் குடும்பங்களுக்கும் நிவாரணங்களை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை மேற்படி செயற்திட்டம் தொடர்பில் நேற்று கருத்து தெரிவித்துள்ள அமைச்சர் மஹிந்த அமரவீர,.. மேற்படி செயற்திட்டத்திற்காக 200 பில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் பிரதமரின் தலைமையில் இடம்பெற்றுள்ள வாழ்க்கைச் செலவு தொடர்பான குழு கூட்டத்திலும் அது தொடர்பில் கலந்துரையப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

பொருளாதார ரீதியில் பாரிய பாதிப்புகளை எதிர்நோக்கியிருக்கும் தெரிவு செய்யப்பட்ட 32 இலட்சம் குடும்பங்களுக்கே அந்த நிவாரணங்கள் வழங்கப்படும் என்றும் ஜூலை மாதம் முதல் எதிர்வரும் ஆறு மாதங்களுக்கு அதற்கான செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய ஒரு குடும்பத்திற்கு ஆகக் குறைந்தது 7,500 ரூபா வீதம் நிதியை பெற்றுக் கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். உலக வங்கியானது 200 மில்லியன் டொலர் நிதியையும் ஆசிய அபிவிருத்தி வங்கி மேலும் 200 மில்லியன் டொலர்களையும் அரசாங்கத்திற்கு பெற்றுக் கொடுத்துள்ளதுடன் அந்த நிதியையும் பயன்படுத்தி மேற்படி நிவாரண செயற் திட்டம் முன்னெடுக்கப்பட்டவுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நேற்று காலை ஆரம்பித்த...

தெரிவித்துள்ளார். ரயில் சாரதிகள் மற்றும் கட்டுப்பாட்டாளர்கள் நேற்றுக்காலை முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

ரயில்வே ஊழியர்கள் கடமைக்கு சமுகமளிப்பதற்காக எரிபொருள் பெற்றுக்கொள்ள முடியாமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே மேற்படி வேலைநிறுத்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டதாக ரயில்வே தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.

அதேவேளை, அனைத்து ரயில்களும் தாமதமாகும் அல்லது ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்படும் என்றும் ரயில்வே திணைக்கள உயரதிகாரியொருவர் நேற்றுக்காலை தெரிவித்தார். அதன்படி நேற்று முற்பகல் சேவையில் ஈடுபடவிருந்த 20க்கும் மேற்பட்ட ரயில்கள் சேவையில் ஈடுபடவில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

இரத்துச் செய்யப்பட்டிருந்த ரயில் சேவைகளில் அலுவலக ரயில் சேவைகள் சிலவும் உள்ளடங்குவதாகவும் நேற்றைய தினம் மட்டுமன்றி நேற்று முன்தினமும் இவ்வாறு சில ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறெனினும் ரயில்வே தொழிற்சங்கங்களின் வேலை நிறுத்தப் போராட்டம் நிறைவடைந்துள்ளதுடன் நேற்று பிற்பகல் ரயில் சேவைகள் வழமைக்குத் திரும்பியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கடவுச்சீட்டு ஒரே நாள்...

"வெளிநாடுகளுக்கு பணிக்காக செல்வோரின் நலன் கருதி, ஒரே நாளில் கடவுச்சீட்டை வழங்கும் நிலையங்களை பல இடங்களில் தற்போது நாம் திறந்துள்ளோம்.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் மாத்தறை, வவுனியா, கண்டி போன்ற பகுதிகளில் இந்த நிலையங்களை திறக்கவுள்ளோம். எனவே, தூர பிரதேசங்களிலிருந்து பத்தரமுல்லைக்கு எவரும் வரவேண்டியத் தேவைக்கிடையாது.

எமது துயரங்களை நாம் தான் போக்கிக் கொள்ள வேண்டும். நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்த நாட்டை முன்னேற்ற முடியுமென நினைத்தால் அனைத்தையும் வெற்றிக் கொள்ள முடியும்.

இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள வரிசை யுகத்தினால் சுற்றுலாப்பயணிகள் வருகைத் தரும் வீதம் வெகுவாகக் குறைவடைந்துள்ளது. இந்த நிலைமையை நாம் மாற்றியமைக்க வேண்டியது எமது கடமையாகும். நாம் முதலீடுகளை மீண்டும் நாட்டுக்குள் ஈர்க்க வேண்டும். நான் அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள நிலையில் இன்னமும் எனது பணிகளை முழுமையாக ஆரம்பிக்கவில்லை என்றார்.

## மனித உரிமை ஆணைக்குழு...

அங்குள்ள தற்போதைய நிலைமைகளை ஆராய்வதற்காக நேற்றைய தினம் குழுவொன்று அங்கு சென்றதாகவும் அவர்கள் விசாரணைகளை நடத்தி வழங்கும் அறிக்கையின்படி சம்பவங்கள் தொடர்பில் முழுமையான சுயாதீனமான விசாரணைகளை நடத்தவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் கடந்த சில தினங்களுக்கு முன் கைதியொருவர் சந்தேகத்திற்கிடமான வகையில் மரணமடைந்துள்ளதையடுத்து அங்கு குழப்பகரமான சூழ்நிலை ஏற்பட்டதுடன் புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் புனர்வாழ்வு பெற்று வந்த 700 க்கும் மேற்பட்ட கைதிகள் அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளனர். அதனையடுத்து பொலிஸாரும் இராணுவத்தினரும் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாக சுமார் 600 கைதிகள் மீண்டும் கைது செய்யப்பட்டதுடன் ஏனையோரை தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

## யாழ். கொழும்பு சரக்கு...

விநியோகத்துக்காக மாற்று வழிகளை ஏற்பாடு செய்து தருமாறு யாழ். வணிகர் கழக பிரதிநிதிகள் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தனவிடம் கடிதம் மூலம் இந்த கோரிக்கையை அவர் முன்வைத்துள்ளார்.

அமைச்சருக்கு அனுப்பி வைத்த கடிதத்தில்,

யாழ்.மாவட்டத்திலுள்ள வர்த்தகர்கள் இதுவரை காலமும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை ஏற்றிச் செல்வதற்காக ஏராளமான லொறிகளை பயன்படுத்தினர்.

துரதிஷ்டவசமாக தற்போதைய பொருளாதார நெருக்கடியின் கீழ் எரிபொருள் விநியோகம் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதால் யாழ். மாவட்ட வர்த்தகர்கள் லொறிகளை பயன்படுத்த முடியாத நிலையிலுள்ளனர்.

தற்போதைய நெருக்கடி நிலை மேலும் மோசமடைந்து, அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் இதனால் பொது மக்கள் கடும் சிரமத்திற்காளாகியுள்ளனர்.

யாழ்.மாவட்டத்திலுள்ள வர்த்தகர்களுக்கு போக்குவரத்துக்காக சுமார் பத்து அல்லது பன்னிரெண்டு ரயில்கள் தேவைப்படுவதால் அதற்கான செலவை அவர்கள் செலுத்த தயாராக உள்ளனர்.

எனவே இப்பிரச்சினையின் அவசரத் தேவையைக் கருத்தில் கொண்டு, அத்தியாவசியப் பொருட்களை ரயில்கள் மூலம் சலுகை விலையில் கொண்டு செல்வதற்குத் தேவையான ஏற்பாடுகளை உடனடியாகச் செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் என்றும் அவர் அந்த கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## அரசுக்கு அழுத்தம்...

அதிகரிக்கப்பட்டுள்ளது. உச்ச பஸ் கட்டணம் 2,417 ரூபாவிலிருந்து 2,948 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேற்படி செயற்பாடுகளை முன்னெடுக்காத பஸ் வண்டிகள் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளன. அதேவேளை, திருத்தப்பட்ட கட்டணத்துக்கு மேலதிகமாக பணம் அறவிடப்பட்டால் பயணிகள் 1955 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

எரிபொருள் விலை அதிகரிப்பு ஊழியர்களின் சம்பளம், மசகு எண்ணெய் தட்டுப்பாடு திருத்த நடவடிக்கைகள் உள்ளிட்ட 12 விடயங்களின் கீழ் வருடாந்த செலவுகளை கணிப்பிட்டே 22 வீதமான கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.இந்தவருடத்தில் நான்கு தடவைகள் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கிணங்க பஸ் கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, கட்டணங்களை காட்சிப்படுத்தாத பஸ்களுக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதனை ஆராய்வதற்காக பரிசோதகர்கள் நியமிக்கப்படுவார்கள். மேற்படி பஸ் கட்டண அதிகரிப்பு தொடர்பில் தொழிற்சங்கங்களின் கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட போது, ஒரு பஸ் சங்கம் மாத்திரம் 20 வீத அதிகரிப்பை மேற்கொள்ளுமாறும் ஏனைய சங்கங்கள் 30 வீத அதிகரிப்பை மேற்கொள்ளுமாறும் கோரிக்கை விடுத்தன. அங்கு சங்கங்களுக்கிடையில் சிக்கல்கள் ஏற்பட்டன. ஒரு சங்கம் மாத்திரம் 28 ஆம் திகதி மதியத்துக்கு முன் பஸ் கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்படாவிட்டால் பஸ்களை சேவையிலிருந்து விலக்கிக்கொள்வதாக தெரிவித்தது. அதேவேளை முதலாம் திகதி முதல் பஸ் கட்டண திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டபோது, அதனை தவறென அந்த சங்கம் தற்போது கூறி வருகின்றது. எவ்வாறாயினும் இந்த பஸ் கட்டண திருத்தம் வருடாந்தம் மேற்கொள்ளும் திருத்தமாகும். மக்களுக்கு குறைந்தளவு அழுத்தம் கொடுக்கும் வகையிலேயே இந்த கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.




# யாழ். மாவட்ட விவசாய அறுவடைக்கு சுமார் 16 இலட்சம் லீற்றர் மண்ணெண்ணெய் தேவை

## இந்தியாவிடம் உதவி கோருகின்றார் அங்கஜன் எம்.பி



யாழ் மாவட்ட விவசாய அறுவடைக்கு தேவையான மண்ணெண்ணெயை பெற்றுத்தருமாறு இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவிடம் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் விசேட கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ் மாவட்டத்தில் விவசாய நடவடிக்கைகளுக்கு 1,655,202.84 லீற்றர் மண்ணெண்ணை தேவைப்படுவதாகவும் அவற்றை பெற்றுத்தருமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார். யாழ் மாவட்டத்தில் சிறுபோக பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், அறுவடையை மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளனர். எனினும் நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்கான 1,655,202.84 லீற்றர் மண்ணெண்ணெய் அவசரமாகத் தேவைப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பில் மாவட்ட விவசாயிகள் தொடர்ச்சியாக கோரிக்கைகளை முன்வைத்து வரும்நிலையில், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவிடம் அங்கஜன் இராமநாதன் விசேட கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளார்.

அத்துடன் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர ஆகியோரின் கவனத்திற்கும் இவ்விடயத்தை அங்கஜன் இராமநாதன் எடுத்துச் சென்றுள்ளார்.

குறிப்பாக, இந்தியாவிலிருந்து 300,000 பரல்கள் மண்ணெண்ணெய் இறக்குமதி செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது, அவற்றில் யாழ் மாவட்ட விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அங்கஜன் இராமநாதன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் (28.06.2022, 30.06.2022 தினங்களில்) அனுப்பி வைத்த கடிதங்களில்,

ஆறுகள் மற்றும் நீர்த்தேக்கங்கள் இன்மையால் யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகள் நிலத்தடி நீரைப் பயன்படுத்தியே விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். எனவே பயிர்களுக்கான நீர்ப்பாசன செயற்பாடுகளுக்காக யாழ்ப்பாணத்தில் 49% விவசாயிகள் இன்னமும் எரிபொருளுக்காக காத்திருக்கின்றனர்.

யாழ் மாவட்ட சிறுபோக அறுவடைக்கு 1,655,202.84 லீற்றர் மண்ணெண்ணெய் மற்றும் 84,728.46 லீற்றர் டீசல் உடனடியாக தேவைப்படுகின்றது. விவசாயிகளின் நலன் கருதி அவற்றை உடனடியாக வழங்க ஏற்பாடுகளை செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.



இதேவேளை இவ்விடயம் தொர்பாக விவசாய அமைச்சின் செயலாளருக்கும் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசனிடமும் கோரிக்கை கடிதமொன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

# எரிபொருள் தட்டுப்பாடு; தொற்று நோய்கள் பரவும் அபாயம்

முல்லைத்தீவு குறூப் நிருபர்

முல்லைத்தீவில் கழிவு அகற்றல் இடம்பெறாமையினால் தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய அபாய நிலை ஏற்பட்டுள்ளதாக கரைதுறைபற்று பிரதேச சபை தவிசாளர் க.விஜிந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த மூன்று நாட்களாக எரிபொருள் கிடைக்காமையினால் பிரதேசசபை கழிவு அகற்றல் செயற்பாடுகள் இடம்பெறவில்லை. இதன் காரணமாக கழிவுகள் தேங்கி கிடக்கின்றன. தேங்கும் கழிவுகளினால் தொற்றுநோய்கள் ஏற்படக் கூடிய அபாய நிலை உருவாகியுள்ளது. இதனால் எரிபொருளினை பெற்றுத் தருவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்தியாவசிய சேவைகளில் எமது சேவைகளும் அடங்குவதாக அவர் தெரிவித்தார். இதேவேளை எரிபொருள் நெருக்கடியினால் புதுக்குடியிருப்பு பிரதேச சபை, துணுக்காய் பிரதேச சபை, மாந்தை கிழக்கு பிரதேச சபை ஆகியவற்றின் கழிவு அகற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது மாவட்ட மட்டத்தில் பெரும் பிரச்சினையாக உருவாகியுள்ளது. கழிவு அகற்றல் செயற்பாடுகள் இடம்பெறாவிட்டால் பெருமளவு தொற்றுநோய்கள் ஏற்படக்கூடிய அபாயநிலை முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ளது.

# குருநகர் மீனவர் ஊர்காவற்துறை கடலில் சடலமாக மீட்பு

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் ஊர்காவற்துறை கடற்பகுதியில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை காலை சடலம் மீட்கப்பட்டுள்ளது. இவ்வாறு கடற்பகுதியில் மீட்கப்பட்ட ஆணின் சடலம் மீனவர் ஒருவடையது என தெரியவந்துள்ளது. குருநகர் ஐஸ்பழ வீதியை சேர்ந்த திகாரி நைனாஸ் என்ற 57 வயதுடையவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மரணத்துக்கான காரணம் இதுவரை வெளிவராத நிலையில் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# வவுனியா நகரப் பகுதியிலிருந்து முதியவர் ஒருவரின் சடலம் மீட்பு

வவுனியா விசேட நிருபர்

வவுனியா நகரப் பகுதியிலிருந்து முதியவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். வவுனியா, மில் வீதியில் நேற்றுமுன்தினம் (30.06) இரவு 7.30 மணியளவில் சடலம் மீட்கப்பட்டுள்ளது. வவுனியா, மில் வீதி பகுதியில் அமைந்துள்ள வியாபார நிலையமொன்றின் வெளிப்புறத்திலுள்ள ஒதுக்குபுறமான இடமொன்றில் முதியவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. வர்த்தகர்கள் உடனடியாக வவுனியா பொலிஸாருக்கு இது தொடர்பில் தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்திற்கு இரவு சென்ற வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி கஜேந்திரா தலைமையிலான பொலிஸார் சடலத்தை பார்வையிட்டதுடன், தடவியல் பொலிஸாரின் உதவியுடன் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். சடலத்தை மீட்டு வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.



உடற்கூற்று பரிசோதனைக்கு பின்னரே இறப்புக்கான காரணம் தெரியவரும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர் வவுனியா நகரப்பகுதியில் நடமாடித் திரிபவர் எனவும், நீலப் பெட்டி சேட்டும், சாரமும் அணிந்துள்ளார். முதியவரது சடலத்தை பொறுப்பேற்க அல்லது அடையாளம்காண அவரது உறவினர்கள் அல்லது நண்பர்கள் இருந்தால் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறும் பொலிஸார் மேலும் கோரியுள்ளனர்.

இதேவேளை, வவுனியா நகரப்பகுதியில் உள்ள மரக்கறி விற்பனை நிலையத்திற்கு பின்புறமாக கடந்த புதன்கிழமை 38 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் மாவட்ட சுகாதார சேவையாளர்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்படவில்லை

(மன்னார் குறூப் நிருபர்)

மன்னார் மாவட்ட வைத்தியசாலைகளில் கடமையாற்றும் சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்கள் நேற்று வெள்ளிக்கிழமை(1) காலை 9 மணி முதல் 11.30 மணி வரை பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

சுகாதார சேவையாளர்களுக்கான பிரத்தியேக எரிபொருள் விநியோகம் வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் வழங்கப்படுகின்ற போதும் மன்னார் மாவட்டத்திலுள்ள சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்களுக்கு உரிய முறையில் எரிபொருள் வழங்கப்படாமையை கண்டித்தே நேற்று பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட சுகாதார திணைக்களத்தில் சுமார் 1200 வரையிலான பணியாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கடமையாற்றி வருகின்றனர்.



இவர்களில் அதிகமானவர்கள் தூர இடங்களிலிருந்து வந்து தமது நிலையங்களில் கடமையாற்றி வருகின்றனர். எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக அரச பணியாளர்களை சுழற்சி முறையில் கடமையாற்றுவதற்கும்,வீடுகளிலிருந்து கடமையாற்றுவதற்கும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஜனாதிபதியினுடைய வர்த்தமானி அறிவித்தல் மற்றும் ஏனைய சுற்று நிரூபங்களின் படி சுகாதார திணைக்களத்தைச் சேர்ந்த அனைவரும் 7 நாட்களும், 24 மணி நேரமும் கடமையாற்ற வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றனர். ஆனால் வைத்தியசாலைகளில் கடமையாற்றுகின்ற பணியாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் தற்போது வரிசைகளில் நின்று எரிபொருளை பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இதனை கருத்திற்கொண்டு வழங்கப்பட்ட சுற்றுநிருபங்களின் படி வெள்ளிக்கிழமை தினங்களில் சுகாதார திணைக்களத்தைச் சேர்ந்த பணியாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்ட எரிபொருள் விற்பனை நிலையங்களில் எரிபொருள் வழங்கப்பட வேண்டும்.

எரிபொருள் தட்டுப்பாடு

# தனியார் பஸ் சேவைகள் இடைநிறுத்தம்

யாழ்.விசேட நிருபர்



கோண்டாவில் சாலையில் நீண்ட நாட்களாக காத்திருந்த போதிலும், தமக்கான எரிபொருளை உரிய முறையில் வழங்காமையால் தாம் சேவையிலிருந்து விலகியுள்ளதாக அச்சுவேலி தனியார் பஸ் சாரதிகள் தெரிவித்துள்னர்.

யாழ்ப்பாணம் அச்சுவேலிக்கு இடையிலான தனியார் பஸ் சேவைகள் இடம்பெறாமையால் பயணிகள் பெரும் பாதிப்பினை எதிர்கொண்டுள்ளனர்.

டீசல் தட்டுப்பாடு மற்றும் தமக்கான டீசலை உரிய முறையில் வழங்காமை ஆகியவை காரணமாக பஸ் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அதனால் பாடசாலை போக்குவரத்து சேவை, அத்தியாவசிய சேவைகளிலிருந்து தாம் விலகியுள்ளதாக தனியார் பஸ் வாகன சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

சேவைகளை இடைநிறுத்தியுள்ளமையால், சாரதி, நடத்துனர்கள் பொருளாதாரரீதியாக பெரும் பாதிப்புக்கு முகம் கொடுத்து வருகின்றனர். அச்சுவேலி தனியார் பஸ் சேவையில் 60 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள போதிலும் தற்போது ஆறு பஸ்கள் மாத்திரமே சேவையில் ஈடுபடுவதாக சங்கத்தின் பிரதிநிதி தெரிவித்தார்.

# எரிபொருள் விநியோகத்தில் ஒழுங்குமுறை இன்மையால் பொது மக்கள் அவதி

(தலைமன்னார் விஷேட நிருபர்)

மன்னார் மாவட்டத்துக்கு எரிபொருள் வருகின்றபோதும் இங்கு விநியோகிக்கும் முறையில் சரியான ஒழுங்கு முறைகளை கையாளப்படாமையால் மக்கள் அவதிகளுக்கு உள்ளாகி வருவதாக மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் அரசாங்க அதிபருக்கு அனுப்பியுள்ள அவசர கடிதத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டம் பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கு நேற்று வெள்ளிக்கிழமை (01.07.2022) அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தின் புள்ளி விபரங்களின்படி கடந்த சில வாரங்களாக சாதாரண நிலைமையை விட பல மடங்கு எரிபொருள் வந்துள்ளன. ஆனால் வாகனத்திற்கு எரிபொருள் தட்டுப்பாடு நீடிக்கின்றது. ஒழுங்கு முறையாக எந்தவித ஒழுங்கும் இங்கு உருவாக்கப்படவில்லை.

மிகக்குறைந்த சனத்தொகை கொண்ட மாவட்டத்தில் ஒழுங்கு முறைகளை உருவாக்குவது ஓரளவு இலகுவானது. அசாதாரண சூழ்நிலையில் பணி செய்வது என்பது சவாலுக்குரியதே என்பதை நாம் புரிந்துகொள்ளாமல் இல்லை. எனவே மீனவர்களும், விவசாயிகளும் மிகக் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர்.

அரச ஊழியர்கள் அலுவலக அடையாள அட்டை வைத்திருப்பவர்களுக்கு எரிபொருள் வழங்கும் முறைமை முற்றிலும் முரணானது.

30.06.2022 ஒரு டோக்கன் ஆயிரம் ரூபாவிற்கு விற்பனையாகியது. அத்தியாவசிய தேவையுள்ள திணைக்களங்களுக்கு ஒதுக்கீடு செய்யுங்கள். குறித்த திணைக்களங்கள் இவர்களுக்கு பகிர்வு செய்யட்டும்.

ஒழுங்குமுறை இன்மையால் அவசியம் எரிபொருள் தேவைப்படுகிறவர்களும் பாதிக்கப்படுகின்றனர். இதனால் புதிய எரிபொருள் மாபியா முகவர்கள் உருவாகி விட்டனர்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களுக்கு எதிராக பொலிஸ் முறைப்பாடு செய்த சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. ஒரே நபர்கள் மாறி,மாறி எல்லா எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் பயன் பெறுகின்றனர்.

மன்னார். மாவட்டத்தில் மிகப்பெரும் வன்முறை தோன்றுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. இதை தடுப்பதற்கான தார்மீக பொறுப்பும் கடமையும் தங்களுக்குரியது என்பதை தயவுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

# திண்மக்கழிவு அகற்றல் செயற்பாடுகளில் நெருக்கடி

யாழ்.விசேட நிருபர்

எரிபொருள் நெருக்கடி காரணமாக யாழ்.மாநகர சபையில் முன்னெடுக்கப்படுகின்ற திண்மக்கழிவு அகற்றல் செயற்பாடுகளில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாக மாநகர சபை சுகாதார குழு தலைவர் வ.பார்த்தீபன் தெரிவித்துள்ளார்.

திண்மக்கழிவு அகற்றல் செயற்பாடு நெருக்கடி நிலை தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதார நெருக்கடி என்பது மக்களை பாதிக்கின்ற அளவிற்கு யாழ்ப்பாண மாநகர சபையினுடைய செயற்பாடுகளையும் பாதித்துள்ளது. இதனால் யாழ் மாநகரசபை முன்னெடுக்கின்ற திண்மக்கழிவு அகற்றல் செயற்பாடு மிகவும் சவாலான ஒன்றாக மாறியுள்ளது.

2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் புதிய திண்மக்கழிவகற்றல் பொறிமுறை உருவாக்கப்பட்டது. இதற்கமைய யாழ் மாநகரசபைக்கு உட்படட 27 வட்டாரங்களுக்கும் ஒரு உழவு இயந்திரம் என்ற அடிப்படையில் வழங்கப்பட்டு கழிவகற்றப்பட்ட போதும், தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியினால் 9 உழவு இயந்திரங்களே திண்மக் கழிவகற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன. இது இடர் கால கழிவகற்றல் முகாமைத்துவத்தினை உருவாக்கியுள்ளது. வாரத்திற்கு ஒரு முறையாவது ஒரு வீட்டிற்கு செல்லவேண்டும் என்கிற மாநகர முதல்வரின் கோரிக்கைக்கேற்ப புதிய நேர அட்டவணைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. எரிபொருள் நெருக்கடியால் திண்மக் கழிவகற்றலில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை மக்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

கழிவுகளை அகற்ற முடியாத நேரங்களில் யாழ் மாநகர சபைக்குட்பட்ட 9 இடங்களில் மக்கள் கழிவுகளை தரம் பிரித்துக் கொண்டு ஒப்படைக்கின்ற இடங்களாக பிரகடனப்படுத்தி இருக்கின்றோம். ஏதோவொரு வகையில் தங்களுக்கு அருகில் இதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் கழிவுகளை கொடுக்கமுடியும்.

இதனை சில நாட்களில் பத்திரிகை வாயிலாக பகிரங்கப்படுத்துவோம். காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெறுவதற்கான ஒழுங்குகள் செயற்படுத்தப்படவுள்ளன. எனவே இந்த இடர்கால கழிவகற்றல் முகாமைத்துவத்திற்காக மக்கள் பூரண ஒத்துழைப்பினை தர வேண்டும். அத்துடன் இயலுமான அளவிற்கு கழிவுகளை குறையுங்கள் என்றார்.

# கிழக்கின் குரல்



# மட்டக்களப்பு மாவட்ட சிறுபோக வேளாண்மை அறுவடை விழா

*மட்டக்களப்பு விசேட நிருபர்*

நாடு எதிர்கொண்டுள்ள உணவுப் பிரச்சினையை ஓரளவிற்கு தீர்க்கும் முகமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கையின் 2022 அறுவடை விழா நேற்று முன்தினம் (30) கிரான் தவணைக்கண்டத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 36,000 ஹெக்டரில் சிறுபோக வேளாண்மை செய்யப்பட்டிருந்தது. மட்டக்களப்பு வாகனேரி நீர்ப்பாசனத் திட்டத்தில் உள்ள வயலில் வேளாண்மை அறுவடை ஆரம்பிக்கப்பட்டது.



வாகனேரி திட்ட முகாமைத்துவக்குழுவின் தலைவர் சி.புஸ்பாகரன் தலைமையில் ஆலய வழிபாடுகளைத் தொடர்ந்து அறுவடை விழா இடம்பெற்றதுடன் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் கலந்து கொண்டு பாரம்பரிய முறைப்படி அறுவடையை ஆரம்பித்து வைத்தார்.

இந்த அறுவடை விழாவில் மட்டக்களப்பு நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி.ந.நாகரெத்தினம், மட்டக்களப்பு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.ஜெகன்நாத், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட கிரான் தவணை கண்டத்தில் வேளாண்மை செய்துள்ள விவசாயிகள் உள்ளிட பலர் இதன் போது கலந்து சிறப்பித்தனர்.

# மு.கா பிரதிப் பொருளாளர் ஏ.சி.யஹியாகானுக்கு கௌரவ கலாநிதி பட்டம்

குட் நியூஸ் சர்வதேச பல்கலைக்கழகம் மனித நேய மிக்க பணிகளுக்காக சிலரை தெரிவு செய்து அவர்களுக்கு கலாநிதி பட்டம் வழங்கி கௌரவித்த நிகழ்வு கடந்த 21 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றது.



நிகழ்வில் பிரதம அதிதியாக இந்தியா, குட் நியூஸ் சர்வதேச பல்கலைக்கழக பணிப்பாளர் பேராசிரியர் கலாநிதி ஜகோப் சிமென் கலந்து கொண்டார். கௌரவ அதிதியாக முன்னாள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேராவும் கலந்துகொண்டார். இங்கு முஸ்லிம் காங்கிரஸ் பிரதிப் பொருளாளரும் யஹியாகான் பௌண்டேஷன் தலைவருமான ஏ.சி. யஹியாகானுக்கும் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# திருகோணமலை வைத்தியசாலையில் தேசிய உணவு நிலையம் அங்குரார்ப்பணம்

*தம்பலகாமம் குறூப், கிண்ணியா மத்திய நிருபர்கள்*

திருகோணமலை பொது வைத்தியசாலையில் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட போசனசாலை தேசிய உணவு உற்பத்தி நிலையமாக நேற்று (01) மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச். என்.ஜயவிக்ரமவினால் திறந்து வைக்கப்பட்டது.

இது மாவட்டத்தில் திறந்து வைக்கப்பட்ட 04 வது தேசிய உணவு உற்பத்தி நிலையமாகும். இதற்கு முன்னர் கந்தளாய், கிண்ணியா, திருகோணமலை ஆகிய பிரதேசங்களில் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலைக்கு வரும் பொது மக்களுக்கு தரமான, தூய்மையான



உணவுகளை வழங்கும் நோக்கில் இவ்வுணவகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. உணவு செய்கை முறை தொடர்பில் இரண்டு வருடம் பயிற்சிகளை பெற்றவர்களே இதனை முன்னெடுத்து வருகின்றனர்.

புனர்நிர்மாண வேலைகளை இலங்கை இராணுவத்தின் 22 வது படைப்பிரிவினர் மேற்கொண்டனர்.

இந் நிகழ்வில் திருகோணமலை பொது வைத்தியசாலையின் பணிப்பாளர், 22வது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி, வைத்திசாலை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# அறுகம்பையில் சுற்றுலா பயணிகள் மாட்டு வண்டில்களில் சவாரி

*(ஒலுவில் விசேட நிருபர்)*

அம்பாறை மாவட்டத்தில் சுற்றுலாத்துறைக்கு புகழ்பெற்றுக் காணப்படுகின்ற பொத்துவில் அறுகம்பை பிரதேசத்தில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் மாட்டு வண்டியில் பிரயாணம் செய்து வருகின்றனர்.

நாடு பொருளாதார நெருக்கடிக்கும், எரிபொருள் தட்டுப்பாட்டிக்கும் முகம் கொடுத்துள்ள இக்கட்டான கால கட்டத்தில் பொத்துவில் அறுகம்பை பிரதேசத்துக்கு சுற்றுலா பயணிகளின் வருகையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.



எரிபொருள் பற்றாக்குறை காரணமாக சுற்றுலா பயணிகளை ஏற்றிச் செல்லும் முச்சக்கர வண்டி சாரதிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# காலாவதியான பொருட்கள் விற்பனை; அ'பற்று வியாபாரிகளுக்கு அபராதம்

*பாலமுனை தினகரன் நிருபர்*

அக்கரைப்பற்று பிரதேசத்தில் காலாவதியான பொருட்களை விற்பனைக்கு காட்சிப்படுத்தியமை,மற்றும் விற்பனை செய்தமை ஆகிய குற்றங்களுக்காக இரு வர்த்தகர்களுக்கு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தினால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் நுகர்வோர் அலுவல்கள் பாதுகாப்பு அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது இரு இடங்களில் இனம் காணப்பட்ட கடை உரிமையாளர்களுக்கே 8000 ரூபா மற்றும் 5000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அக்கரைப்பற்று பிரதான வீதியிலுள்ள கடையொன்றின் உரிமையாளர் ஒருவர் பட்டர் மற்றும் ரஸ்க் பக்கட்டுக்களில் பொறிக்கப்பட்டிருந்த விலையை துடைத்தழித்தமை, காலவதியான சிப்ஸ் பக்கட்டை ஏனைய பொருட்களுடன் சேர்த்து விற்பனை செய்தமை என்பவற்றுக்காக 5000 ரூபாவும், விலை காட்சிப்படுத்தப்படாத லாம்பு வால்வுக்காக 3000 ரூபாவுமாக மொத்தமாக 8000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பள்ளிக்குடியிருப்பு பிரதேசத்தில் இன்னுமொரு கடை உரிமையாளர் ஒருவருக்கு காலவதியான பேபி கிரிமை விற்பனைக்கு காட்சிப்படுத்தியமைக்காக 5000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

# சாய்ந்தமருதில் ரிக்ஷா வண்டி உருவாக்கம்

*(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)*

எரிபொருள் பிரச்சினை நாடளாவிய ரீதியில் காணப்படும் இன்றைய சூழலில் எரிபொருள் இல்லாமல் ஆறுபேர் பயணிக்கக்கூடிய ரிக்ஷா வண்டி ஒன்று சாய்ந்தமருதில் உருவாக்கப்பட்டுள்ளது.

சாய்ந்தமருதை சேர்ந்த முஹம்மது நிசார் என்ற நபரே எரிபொருள் இல்லாமல் ஆட்களைச் சுமந்து செல்லும் வகையில் சைக்கிளை கொண்டு ரிக் ஷாவை உருவாக்கியுள்ளார்.

ஒரே நேரத்தில் 6 பாடசாலை



மாணவர்கள் அமர்ந்து பயணம் செய்யக்கூடிய வசதிகளை இந்த ரிக்சா கொண்டுள்ளது. எரிபொருள் இன்மையால் பாடசாலை மாணவர்கள் போக்குவரத்துக்கு கஷ்டப்படும் நிலையை கருத்தில் கொண்டே இதனை செய்ததாகவும் முஹம்மட் நிஸார் தெரிவிக்கின்றார்.

மிக நீண்டகாலமாக வெல்டிங் வேலைகள் செய்து வரும் இவர் இவ்வாறான வண்டிகளை தொடர்ச்சியாக செய்து வழங்கப் போவதாகவும், தற்போது இரண்டாவது வண்டியை செய்வதற்கான வேலைகளை ஆரம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# யானை தாக்குதலில் வயோதிப பெண் பலி

*(மண்டூர் நிருபர்)*

கரடியனாறு பொலிஸ்பிரிவிற்குட்பட்ட ஈரளக்குளம் குடாவெட்டை பகுதியில் நேற்று முன்தினம் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி வயோதிபபெண் பலியானதாக பொலிஸார் தெரிவித்துள்னர்.

ஈரளக்குளம் குடாவெட்டை பிரதேசத்தைச்சேர்ந்த 5 பிள்ளைகளின் தாயான (62) குஞ்சித்தம்பி தேவராணி என்பவரே இந்த தாக்குதலில் அகப்பட்டு மரணமானவராவார்.

சம்பவ தினத்தன்று மாலை வேளையில் தனது வீட்டிலிருந்து வழிபாட்டிற்காக ஈரளக்குளம் சிவன்கோயிலுக்கு சென்று காலையில் வீடு திரும்பிக் கொண்டிருக்கும் போது பனை மரங்கள் நிறைந்த காட்டுக்குள் மறைந்திருநந்த யானை அவரை தாக்கியுள்ளது.

படுகாயமடைந்த அவரை பிரதேசவாசிகளின் உதவியுடன் மாவடிவேம்பு வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதித்த போதும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்ததாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

# பத்திரிகை விநியோகம் வழமைக்கு

*மட்டக்களப்பு விசேட நிருபர்*



தற்போது நிலவும் எரிபொருள் பற்றாக் குறை காரணமாக நேற்று முன்தினம் (30) கிழக்கின் மட்டக்களப்பு மற்றும் அம்பாரை மாவட்டங்களுக்கு பத்திரிகைகள் விநியோகம் தடைப்பட்டிருந்தது. எனினும் நேற்று (01) மட்டக்களப்பில் அது வழமைக்குத் திரும்பிருந்தது. வாசகர்கள் ஆர்வத்தோடு வந்து பத்திகைகளை கொள்வனவு செய்தததைக் காண முடிந்தது.

இதுபற்றி விநியோகிஸ்தரிடம் வினவியபோது கொழும்பிலிருந்து பத்திரிகைகளை கொண்டு வரும் தனியார் வாகனம் நேற்று முன்தினம் (30) சேவையில் ஈடுபடாததால் பத்திரிகை விற்பனை நடைபெறவில்லை.

பத்திரிகைகளின் விநியோகப்பிரிவு, கொழும்பிலிருந்து தனியார் வாகனத்தில் அனுப்பமுடியாதவிடத்து இலங்கை போக்குவரத்து பஸ் மூலம் பத்திரிகைகளை அனுப்புவார்கள் எனத் தெரிவித்துள்ளதாகவும் வாசகர்கள் ஏமாறத்தேவையில்லை எனவும் அவர் தெரிவித்தார். நூலகங்கள் மற்றும் வழமையான வாடிக்கையாளர்களுக்கு பத்திரிகைகளை அவர்களின் இடத்திற்கே விநியோகித்ததாகத் அவர் மேலும் தெரிவித்தார்.

# மாஸ்டர் சிவலிங்கத்துக்கு மஞ்சந்தொடுவாயில் சிலை

*புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்*

கலைமாமணி மாஸ்டர் சிவலிங்கத்தின் உருவச் சிலை மஞ்சந்தொடுவாய் வடக்கு கிராமத்தின் அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் மஞ்சந்தொடுவாய் தொழில்நுட்ப கல்லூரி முன்பாக நேற்று முன்தினம் (30) திறந்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலையின் 2001 ம் ஆண்டு உயர்தர பழைய மாணவர்களினால் இந்த உருவுருவச் சிலை அன்னாரின் சொந்த ஊரான மஞ்சந்தொடுவாயில் மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவனினால் திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் திருமதி பாரதி கெனடி, மஞ்சந்தொடுவாய் தொழில்நுட்ப கல்லூரியின் அதிபர் மற்றும் சிவ



லிங்கம் ஐயாவின் பாரியார், புதல்வர் வைத்தியர் விவேகானந்தன் உள்ளிட்ட ஆலய நிர்வாக சபை உறுப்பினர்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

# தோட்டக்காரர்களின் உபகரணங்கள் திருட்டு

*(மூதூர் தினகரன் நிருபர்)*

மூதூர் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட எல்லைக் கிராமமான சாபிநகர், உப்புக்காச்சிமடு ஆகிய பிரதேச இரு தோட்டக் காணிகளில் பொருத்தப்பட்டிருந்த நீர் இறைக்கும் மின் இயந்திரம், நீர் பாய்ச்சும் குழாய், முட்கம்பி உள்ளிட்ட விவசாய உபகரணங்கள் என பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

மேலும் கடந்த ஒரு வார காலத்திற்குள் இவ்விரு திருட்டுக்களும் இடம்பெற்றுள்ளது. பல்வேறு பொருளாதார கஸ்டங்களுக்கு மத்தியில் பல்லின மரக்கறிப் பயிர்களை உற்பத்தி செய்து தனது குடும்ப ஜீவனோபாயத்தை கடத்திவரும் இத்தோட்டக்காரர்களின் தோட்டங்களில் வைக்கப்பட்டிருந்த பொருட்களே திருடப்பட்டுள்ளன.

# பெற்றோலை பதுக்கிவைத்து வியாபாரம் செய்தவர் கைது

*மட்டக்களப்பு குறூப் நிருபர்*

சட்டவிரோதமான முறையில் பெற்றோலைப் பதுக்கி வைத்து வியாபாரம் செய்த வர்த்தகர் ஒருவரை காத்தான்குடி பொலிசார் நேற்று முன்தினம் மாலை கைது செய்துள்ளதுடன் அவரிடமிருந்து ஒரு தொகை பெற்றோலையும் மீட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி எம். எஸ்.ஏ.றஹீம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்கவின் வழிகாட்டலில் காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறியின் பணிப்புரையின் கீழ் குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி றஹீம் தலைமையிலான பொலிசார் நடாத்திய திடீர் சுற்றிவளைப்பின்போது காத்தான்குடி பிரதேச வர்த்தக நிலையமொன்றிலிருந்து இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# உள்நாட்டு துப்பாக்கியுடன் கந்தளாயில் நால்வர் கைது

*கந்தளாய் தினகரன் நிருபர்*

திருகோணமலை பேரமடு காட்டுப்பகுதியில் சட்டவிரோதமாக உள்நாட்டு துப்பாக்கிகளை வைத்திருந்த நான்கு பேர் புதன்கிழமை (29) இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கந்தளாய் அக்போகம பகுதியைச் சேர்ந்த இருவரையும், கந்தளாய் அக்போபுர பகுதியைச் சேர்ந்த இருவரையும் தமக்கு கிடைத்த இரகசிய தகலின் அடிப்படையில் கைது செய்ததாக வன ஜீவராசி அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.



சந்தேக நபர்களிடமிருந்து உள்நாட்டு துப்பாக்கி, கத்தி, துப்பாக்கி குண்டுகள்,மருந்துகள்,மற்றும் லைட் போன்றனவும் கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்களை தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.




# மரக்கறி உற்பத்திகளை கொழும்பு கொண்டு செல்ல அரசு ஏற்பாடு

## நுவரெலியா மாவட்ட செயலாளர் தெரிவிப்பு



**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

நுவரெலியா மாவட்டத்திலிருந்து கொழும்புக்கு மரக்கறி வகைகளை கொண்டு செல்வதற்கு, நேற்று முதல் விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலகொட தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டால், நுவரெலியா மாவட்ட விவசாயிகள், தமது விளைச்சல்களை வெளிமாவட்டங்களுக்கு கொண்டு செல்லமுடியாமல் உள்ளனர்.

இந்நிலையிலேயே நுவரெயாவிலிருந்து கொழும்புக்கு அத்தியாவசிய பொருட்களை கொண்டு செல்வதற்கு இராணுவத்தினூடாக எரிபொருளை வழங்கும் புதிய நடவடிக்கை நேற்றிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் அதிகமான மக்கள், மரக்கறி செய்கையில் ஈடுபட்டுள்ளனர். அதேவேளை, இந்த அத்தியாவசிய தேவைக்காக ஒரு வாரத்திற்கு மாத்திரம் எரிபொருள் இருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.



தலவாக்கலை நகரிலுள்ள ஐஒசி எரிபொருள் நிலையத்திற்கு மிக நீண்ட நாட்களின் பின்னர் நேற்று (1) பெற்றோல் வந்ததையடுத்து அதனை பெற்றுக்கொள்வதற்காக முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் வரிசையில் நின்றன. இதன்போது காலையிலிருந்து வரிசையில் நின்றவர்களுக்கு பிரதேச மக்களால் தேநீர் வழங்கப்பட்டது. (தலவாக்கலை குறூப் நிருபர்)

# நகர சபை ஊழியர்களுக்கு எரிபொருள் கோரி கம்பளை நகரில் ஆர்ப்பாட்டம்



கம்பளை நகர சபை ஊழியர்கள் தங்களுக்கும் எரிபொருள் வழங்கலில் முன்னுரிமை கோரி நேற்று காலை ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர்.

கம்பளை நகர சபை காரியாலயத்தில் இருந்து கம்பளை நாவலப்பிட்டி பிரதான வீதியில் அமைந்து இருக்கும் பெற்றோல் நிலையம் வரை பேரணியாக சென்று அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

குப்பைகள் சேகரிக்கும் வாகனங்களுக்கு எரிபொருள் தேவை என தெரிவித்த அவர்கள் பெற்றோல் நிரப்பு நிலையம் முன்பாக சென்று பதாதைகளை மற்றும் உபகரணங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கம்பளை நாவலப்பிட்டி பிரதான வீதியை மறைத்து ஆர்ப்பாட்டம் செய்த அவர்கள்,கம்பளை நகர சபை ஊழியர்களுக்கு எரிபொருள் வழங்காவிட்டால் நகரில் இருக்கும் குப்பைகளை அகற்றப்போவதில்லை என கோஷம் எழுப்பினர். இதனால் வாகன நெரிசல் ஏற்பட்டு போக்குவரத்து தடைபட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்களுடன் கம்பளை பொலிஸார் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களுக்கு எரிபொருள் வழங்கப்படுமென உறுதியளித்த பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

கம்பளை நாவலப்பிட்டி பிரதான வீதியில் அமைந்திருக்கும் பெற்றோல் நிலையத்தில் பொலிஸார், இராணுவம், கடற்படை ஆகியோர் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

### நோர்வூட்டில் நகரில்

# கொள்ளையிடப்பட்ட 177 பவுண் நகை 06 மாதங்களுக்கு பின் மீட்பு; நால்வர் கைது



**நோட்டன் பிரிட்ஜ், ஹற்றன் விசேட, ஹற்றன் சுழற்சி நிருபர்கள்**

நோர்வூட் நகரிலுள்ள தங்க நகை அடகு பிடிக்கும் நிலையமொன்றை உடைத்து, சுமார் 3 கோடி 15 இலட்சம் பெறுமதியுடைய 177 பவுண்களை கொள்ளையிட்ட நான்கு சந்தேக நபர்கள், சம்பவம் இடம்பெற்று ஆறு மாதங்களுக்கு பின்னர் நேற்றுமுன்தினம் (30) கைது செய்யப்பட்டுள்ளனர்.

நோர்வூட் நகர் பகுதியை சேர்ந்த மூன்று ஆண்களும், பெண்ணொருவருமே இவ்வாறு ஹற்றன் பொலிஸின், ஊழல் ஒழிப்பு பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2021 டிசம்பர் 09 ஆம் திகதியன்று நகை அடகுக்கடை உடைக்கப்பட்டு தங்க நகைகள் களவாடப்பட்டிருந்தன. இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து, அந்த அடகுக் கடையில் சுமார் 10 வருடங்களாக வேலை செய்த பெண்ணொருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அவரது கைரேகை அடையாளங்களும் பதிவு செய்யப்பட்டது.

இவ்வாறு கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்திய பெண்ணின் கைரேகையும் மீட்கப்பட்ட பொருட்களில் உள்ள கைரேகையும் ஒரே மாதிரியானவை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து விசாரணை ஆரம்பமானது. களவாடப்பட்ட நகைகளை விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வேளையிலேயே, சூத்திரதாரிகள் அதிரடியாகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

54 தங்க சங்கிலிகள், 757 தோடுகள், 177 பென்டண்கள், 18 வலையல்கள், 1 தங்க நெக்லஸ் உட்பட மேலும் சில தங்க நகைகளே கொள்ளையடிக்கப்பட்டிருந்தன.

# பலாங்கொடையில் இன ஐக்கியத்தை வலியுறுத்தும் வைபவ நிகழ்வு

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

பலாங்கொடைப் பகுதியில் உள்ள பதினாறு பள்ளிவாசல்களின் பரிபாலன சபையின் தலைவராக பல வருட காலம் சிறப்பாக பணியாற்றி வந்த எம்.ஜே. எம். மஹ்தூன் ஹாஜியாரின் மறைவினையொட்டி பலாங்கொடைப் பகுதி பௌத்த மக்கள் அவரது இல்லத்தில் மத வழிபாடுகளை நடத்தி அன்னதானம் வழங்கும் நிகழ்வு ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தனர்.

இன ஐக்கியத்தை வலியுறுத்தும் நிகழ்வாக இது அமைந்திருந்ததுடன் இந்த நிகழ்வில் பலாங்கொடை பகுதி சகல மதகுருமார்கள் பள்ளிவாசல் பரிபாலன சபை உறுப்பினர்கள் மேலும் பல பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர். வைபவத்தில் கலந்து கொண்ட பௌத்த மதகுருமாருக்கு அன்னதானத்தினை பலாங்கொடை பெரிய பள்ளிவாசல் பேஷ் இமாமும் இரத்தினபுரி மாவட்ட ஜம்யதுல் உலமா சபையின் அங்கத்தவருமான அஷ்சேய்க் ரசாதி ஸமானி அளித்தார்.

மறைந்த பள்ளிவாசல்களின் பரிபாலன சபை தலைவர் மஹ்தூன் ஹாஜியாரின் நல்ல பணிகளை முன்னிட்டு அவரது சேவையினை பாராட்டி கௌரவிக்கும் முகமாக பௌத்த மக்களால் இந்த வைபவ நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக தற்போதைய பள்ளிவாசல்களின் சபை தலைவராக பணியாற்றும் ஏ.எல்.நாஜுபுதீன் தெரிவித்தார்.



# இந்திய நிவாரண பொருட்கள் வழங்குவதில் இரத்தினபுரி சில தோட்ட மக்கள் புறக்கணிப்பு

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் விநியோகிப்பதில் இரத்தினபுரி மாவட்டத்தின் ஹுனுவல தோட்ட மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக அத்தோட்ட தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பலரு ம் தெரிவிக்கின்றனர்.

இரத்தினபுரி மாவட்டத்தின் ஏனைய பல தோட்டங்களுக்கும் இந்த உதவி கிடைத்துள்ள போதிலும் இத்தோட் ட மக்களுக்கு மட்டும் இந்த உதவிக ள் இதுவரை கிடைக்காமை பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துவதாக இப்பிரதேச சமூக செயற்பாட்டாளர் சாமஸ்ரீ சமூக ஜோதி கே.தியாகேஸ்வரன் தெரிவித்தார்.

இதற்கு அதிகாரிகளால் தகவல்கள் வழங்குவதில் ஏற்பட்ட தாமதங்கள் அல்லது வேறு ஏதும் விடயங்கள் காரணங்களாக இருக்கலாம் என இம்மக்கள் மத்தியில் சந்தேகத்தை வலுப்படுத்தி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய மத்திய அரசு மற்றும் தமிழ்நாடு இணைந்து வழங்கிய இந்த நிவாரண உதவி இம்மக்களுக்கு கிடைக்காமைக்கு அரச அதிகாரிகளின் அசமந்த போக்கு காரணமா அல்லது இன பாகுபாடா என்பது தொடர்பில் இத்தோட்ட மக்கள் சந்தேகங்களை வெளிப்படுத்துகின்றனர். இப்பிரதேச மக்கள் அனைவருக்கும் தாமதமின்றி இந்திய நிவா ரண பொருட்கள் கிடைப்பதற்கு வ ழி செய்யப்படல் வேண்டும் எனவும் இம்மக்கள் வேண்டுகோள் விடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# உணவுப் பயிர்களை அழிக்கும் குரங்குகள்

## வனஜீவராசி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க கோரிக்கை

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

பலாங்கொடை பிரதேசத்தில் பல விவசாய காணிகளில் குரங்குகள் உணவுப்பயிர்களை அழித்து வருவதாக கவலை தெரிவிக்கப்படுகிறது. இம்புல்பே, அலுத்நுவர ,பெலிஹுல்ஓய, பம்பஹின்ன தென்ன, தியவின்ன வெலிஓய, கல்தோட்டை உட்பட பல பி ரதேசங்களிலும் மரக்கறி, பழவகை,சேனைப்பயிர்செய்கைகளை குரங்குகள் அழித்து வருவதாக தெரிவிக்கும் கிராம மக்கள் இது தொடர்பில் வனஜீவராசி அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கின்றனர். குரங்குகள் உணவுப் பயிர்களை நாசம் செய்வது மட்டுமன்றி இவற்றின் செயற்பாடுகள் மக்களின் அன்றாட நடவடிக்கைகளை பாதிப்படையச் செய்வதுடன் இவை வீடுகளை ஆக்கிரமித் து உணவு பொருட்கள் மற்றும் உபகரணங்களுக்கும் சேதத்தை விளைவிப்பதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

# பதுளை பகுதியில் திருடப்பட்ட பொருட்கள் மீட்பு; நால்வர் கைது

**பதுளைதினகரன் விசேட நிருபர்**

பதுளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் வீடுகள், கடைகளில் திருடப்பட்ட சுமார் 2.5 மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமின்றி அந்த பொருட்களுடன் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய ஒரு ஜோடியை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்துள்ளனர். சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுஜித் வெதமுல்லவின் பணிப்புரையின் பேரில் பதுளை பொலிஸ் தலைமையக அதிகாரிகள் குழுவினால் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொலிஸாரின் தகவலின்படி அப்பகுதியில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் தம்பதிகளிடம் இந்த பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கணினி துணைக்கருவிகள், எரிவாயு சிலிண்டர்கள் மற்றும் மின்சாதனங்கள் உட்பட சுமார் 2.5 மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்கள் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் ஏனைய சந்தேக நபர்களை கைது செய்வதற்காக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். பதுளை தலைமையக பொலிஸ் அத்தியட்சகர் சுஜித் வெதமுல்லவின் பணிப்புரையின் பேரில் பதுளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# நகர்வலம்



# வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கை வெற்றி அளித்திருப்பதாக அதிகாரிகள் தெரிவிப்பு

( திறப்பனை தினகரன் நிருபர் )

நாட்டில் ஏற்படப்போவதாகக் கூறப்படும் உணவுத் தட்டுப்பாட்டை போக்கும் நோக்கில் முன் வைக்கப்பட்டுள்ள வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கை திட்டம் வெற்றியளித்து வருவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக பெண்கள் இத் துறையில் அதிக அக்கறையுடன் செயல்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அநுராதபுர மாவட்டத்தில் உள்ள அனேகமான கிராமிய பிரதேசங்களில் இச் செய்கையில் பெண்களின் பங்களிப்பு அதிகம் காணப்படுகின்றது.

தம்மிடம் உள்ள இருக்கும் சிறிதளவு நிலத்தில் பசளை உரைகளை பயன்படுத்தி பயிர் செய்கையில் பலர் ஈடுபட்டு வருவதும், அவை நன்றாக வளர்ந்து வருவதும், இயற்கை பசளைகளை மாத்திரம் பாவித்தே இவ் உற்பத்தியில் பலர் ஈடுபட்டு வருவதும், பல இடங்களில் இவை வெற்றியளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. கத்தரி, தக்காளி, மரவள்ளி, பண்டக்காய்,கறி மிளகாய், பீர்க்கு, மிளகாய் போன்ற நாட்டு மரக்கறி வகைகளே இத் திட்டத்தின் கீழ் வீட்டுத் தோட்டங்களில் நடப்பட்டுள்ளதோடு, இது பெண்களின் பொழுது போக்கு காரணியாகவும் தற்சமயம் காணப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இது தவிர வீட்டு முற்றங்களில் முருங்கை இலை உற்பத்தியிலும் பல பெண்கள் ஈடுபட்டு வெற்றி கண்டும் வருகின்றனர்.

# வட மத்திய மாகாண விவசாய நடவடிக்கைகளின் முன்னேற்றம் சம்பந்தமான விசேட கலந்துரையாடல்

( திறப்பனை தினகரன் நிருபர் )

"எக்வ வவமு ரட்ட தினவமு" என்ற விவசாய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வட மத்திய மாகாண விவசாய நடவடிக்கைகளின் முன்னேற்றம் சம்பந்தமான விசேட கலந்துரையாடல் ஒன்று அநுராதபுரத்தில் இடம் பெற்றுள்ளது.

வட மத்திய மாகாண ஆளுநர் மகிபால ஹேரத் தலைமையில் மாகாண சபை கேட்போர் கூடத்தில் இது சம்பந்தமான கூட்டம் அண்மையில் இடம் பெற்றது.

உணவு நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் வகையில் மாகாணத்தில் உள்ள அனைத்து பூமியையும் ஒரு அங்குல நிலத்தைக் கூட விட்டு வைக்காது விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்குரிய நடவடிக்கையை எடுப்பது தேசிய பொறுப்பு வாய்ந்த விடயமாகும் என வட மத்திய மாகாண ஆளுநர் இதன் போது அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்கள் நாட்டில் கூடுதலான உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் இரண்டு முக்கிய மாவட்டங்கள் என கருதப்படுகின்றது.இதன் கீழ் உணவு நெருக்கடிக்கு முகம் கொடுக்க அநுராதபுர மாவட்டம் தயார் நிலையில் இருப்பதாக இக் கூட்டத்தில் கலந்து கொண்ட மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தர இதன் போது தெரிவித்தார்.

விவசாயிகளின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு கூடுதலான நடவடிக்கைகள் எடுக்கப் படவுள்ளதோடு மேலதிக உணவுப் பயிர் உற்பத்தி மற்றும் வீட்டுத் தோட்ட பயிர் உற்பத்தி பற்றி பொது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதோடு, இதில் கூடுதலான பங்களிப்பை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

பொலன்னறுவை மாவட்டத்தில் இம்முறை இப் போகத்தின் போது நெல் உற்பத்தியானது வெற்றியளித்துள்ளதாகவும்,வீட்டுத் தோட்டம் மற்றும் அலுவலக பூமியின் உற்பத்தி இது வரையில் இடம் பெற்று வருவதாகவும் மாவட்ட செயலாளர் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலின் போது விவசாயப் பணிப்பாளர் மாலா ரம்மியலத்தா, மாகாண விவசாயப் பணிப்பாளர் பிரியஞ்சனி மாதவ,அநுராதபுர மாவட்ட விவசாயப் பணிப்பாளர் லலிதா தேனுவ உட்பட அதிகாரிகள் பலர் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

# புத்தர் சிலையொன்றை ரூ. 4 கோடி விற்க முயன்றவர் கைது

அநுராதபுரம் தினகரன் நிருபர்

தொல் பொருள் பெறுமதிமிக்க தங்கம் என சந்தேகிக்கப்படும் புத்தர் சிலையொன்றினை நாலு கோடி ரூபாவிற்கு விற்பனை செய்வதற்கு முயற்சித்த சந்தேக நபர் ஒருவரை கலன்பிந்துனுவெவ மொறகொட பகுதியில் வைத்து விசேட பொலிஸ் அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

விசேட பொலிஸ் அதிரடிப்படையின் வவுனியா முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலொன்றுக்கமைய 29 ஆம் திகதி இரவு மொறகொட பொலிஸ் பிரிவின் மெகொடவெவ பகுதி வீடொன்றில் நடத்திய சுற்றிவளைப்பின் போது சந்தேக நபரை கைது செய்துள்ளதுடன் பெறுமதிமிக்க புத்தர் சிலையொன்றையும் போர 12 துப்பாக்கிக்கு பயன்படுத்தும் தோட்டாக்கள் சிலவற்றையும் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் வவுனியா முகாம் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்டவர் 38 வயதுடைய உணகொள்ளாவ, மெகொடவெவ, மொறகொட பகுதியை வசிப்பிடமாக கொண்டவர் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது. புத்தர் சிலையினை கொள்வனவு செய்வதாக விசேட பொலிஸ் அதிரடிப்படையினரே மாறுவேடம் பூண்டு சென்றுள்ளனர் என்பது மேலும் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக வேண்டி சந்தேக நபரையும் கைப்பற்றிய புத்தர் சிலையயும் மொறகொட பொலிஸ் நிலையத்தில் அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மொறகொட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் மஹிந்த குணரத்ன தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்டுவருகின்றனர். விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் கஹட்டகஸ்திகிலிய நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



புத்தளம் செனமேரிஸ் தமிழ் மகா வித்தியாலயத்தின் 150 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு அதிபர் அருட் சகோதரி ஜெனட் ரொட்ரிகோ புள்ளே சேவை நலன் பாராட்டு நினைவுச் சின்னமொன்றை சமூக ஆர்வலர் ஆசிரியர் எஸ்.ஆர்.எம்.முஹ்சியிடம் கையளிப்பதை காணலாம். (படம் : புத்தளம் தினகரன் நிருபர்)

# சிறுநீரக நோயாளர் உதவி கோரல்

வட்டக்கச்சி, சந்தையடி, விநாயகர் வீதியில் வசிக்கும் புலேந்திரராசா சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். இவருக்கு மூன்று பிள்ளைகள். அவர்கள் மூவரும் பாடசாலையில் கல்வி கற்று வருகின்றனர். குடும்ப செலவுகள், பிள்ளைகளின் படிப்பு செலவுகள், போக்குவரத்து செலவுகள், வைத்தியசாலை செலவுகள் என பல்வேறு செலவுகள் ஏற்பட்டுள்ளன. இவற்றை தன்னால் தனியாக சமாளிக்க முடியாது இருப்பதாகவும் நாளாந்தம் இரு வேளை வைத்தியசாலைக்கு சென்று வருவதால் கூலி வேலைக்கும் தன்னால் செல்ல முடியாது இருப்பதாகவும் இவரது மனைவியான திருமதி புலேந்திரராசா குகனேஸ்வரி தெரிவித்துள்ளார். இவர் தனது செலவுகளை சமாளிக்க பரோபகாரிகளின் உதவியை கோரியுள்ளார். நிதியுதவிகளை கிளிநொச்சியில் உள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளையின் 048200160061349 என்ற கணக்கிலத்தில் வைப்பிடுமாறு இவர் கேட்டுள்ளார்.

## கஹட்டகஸ்திகிலிய பிரதேச செயலர் செந்தில்

# துவிச்சக்கர வண்டியில் கடமைக்கு செல்ல திட்டம்

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக கஹட்டகஸ்திகிலிய பிரதேச செயலாளர் ஆர்.செந்தில் அவரது அதிகாரபூர்வ வாகனத்தை பாவிக்காமல் துவிச்சக்கர வண்டியில் கடமைக்கு செல்வதற்கு தீர்மானித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் எரிபொருளுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் அவரது அதிகாரபூர்வ வாகனத்தை பாவனைக்கு எடுக்காமல் எரிபொருள் சிக்கலுக்கு எதிர்கொண்டுள்ள மக்களுக்கு ஒரு உதாரணமாக பிரதேச செயலாளர் துவிச்சக்கர வண்டியில் கடமைக்கு செல்ல தீர்மானித்துள்ளதாக தெரிவித்தார்.



மடவள பஸார் ஜாமிஉல் கைராத் ஜும்ஆப் பள்ளி வாயல் வருடாந்த பொதுக் கூட்டம் கடந்த 22.02.07 01ந் திகதி பள்ளிவாசல் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் தலைவர் ஹாஜி ஹில்மி உரை நிகழ்த்துவதையும் கலந்து கொண்ட பிரதேச(ஜமாஅத்) மக்களையும் படங்களில் காணலாம். (படம்: பாத்ததும்பர விஷேட நிருபர்)

# வேப்பமடு அர்ரஹ்மா முஸ்லிம் பாடசாலைக்கு கணனி

புத்தளம் தினகரன் நிருபர்



புத்தளம் மன்னார் வீதி நான்காம் மைல்கல் வேப்பமடு அர்ரஹ்மா முஸ்லிம் பாடசாலைக்கு தேவையாக கருதப்பட்ட கணனி பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதோடு பாடசாலை திருத்த வேலைகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் எம்.டீ.எம்.மனாஸின் வேண்டுகோளின் பேரில், சமூக ஆர்வலரும், அமேசன் உயர் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளருமான கலாநிதி இல்ஹாம் மரைக்கார் இவ்வுதவிகளை வழங்கியுள்ளார்.

பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலாநிதி இல்ஹாம் மரைக்கார், அதிபர் எம்.டீ.எம். மனாஸிடம் இவைகளை அன்பளிப்புச் செய்தார்.

இந்நிகழ்வில் பாடசாலையின் உதவி அதிபர் எஸ்.ஏ.சீ. எம். பாசீர், சிரேஷ்ட ஆசிரியரான அஷ்ஷெய்க் ஏ.ஓ. கஹ்ஹார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# கல்முனையில் யோகாசன தின நிகழ்வு

( காரைதீவு குறுப் நிருபர் சகா)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் நடாத்திய சர்வதேச யோகாசன தின நிகழ்வு கல்முனை உவெஸ்லி உயர்தர தேசிய பாடசாலை மைதானத்தில் அண்மையில் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர்.ரி.ஜெ. அதிசயராஜ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு திரு முன்னிலை அதிதியாக இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி தட்ஷஜானந்தஜீ மகராஜ் , பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜெ.எம்.ஏ.டக்லஸ் , கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே .ஜெகதீசன் , சிறப்பு அதிதிகளாக நாவிதன்வெளி பிரதேச செயலாளர் சோ. ரங்கநாதன், காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன், ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன், நாவிதன்வெளி உதவி பிரதேச செயலாளர் . பே.பிரணபரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விசேட அதிதிகளாக கல்முனை வடக்கு கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.லக்குணம், கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலை அதிபர் அருட்தந்தை சந்தியாகு, உவெஸ்லி உயர்தர தேசிய பாடசாலை அதிபர் எஸ். கலையரசன், கல்முனை வடக்கு தலைமைப்பீட சமுத்தி முகாமையாளர் கே.இதயராஜ், நிருவாக கிராம உத்தியோகத்தர் .எ. அமலநாதன், கல்முனை வடக்கு கலாசார உத்தியோகத்தர் .த.பிரபாகரன் ,கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. வசந்தினி யோகேஸ்வரன், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள கற்கை நிலைய வளவாளர்களான கே.சந்திரலிங்கம் கே.குமாரதாசன், பிரதீபன் , எஸ்.சிறிக்காந்தன் , மாவட்ட இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்களான கு.ஜெயராஜி, ந.பிரதாப், கல்முனை வடக்கு பிரதேச செயலக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. க.சிறிப்பிரியா, நிந்தவூர் பிரதேச செயலக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. பா.சுஜிவினி, நாவிதன்வெளி பிரதேசசெயலக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் க.நிலோந்திரன்,மற்றும் ஆலய பரிபாலன சபையின் பிரதிநிதிகள், இந்து இளைஞர் மன்ற உறுப்பினர்கள், இந்து மகளிர் மன்ற உறுப்பினர்கள், மாதர் சங்கத்தின் உறுப்பினர்கள் , மற்றும் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள்,மாணவர்கள்,பாடசாலை மாணவர்கள்,கிராம அபிவிருத்தி சங்கங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள், உட்பட 1500 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.









முந்தல் ஸ்ரீதிரௌபதியம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தில் வியாழக்கிழமை (30)வெளிக்கொடியேற்ற நிகழ்வு இடம்பெற்றது. இதன் போது பலர் கலந்து கொண்டனர். (படம் :உடப்பு குறுப் நிருபர்)

# ஆஸி.யின் சுழல் பந்துவீச்சால் இலங்கை படுதோல்வி



இலங்கை – அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் மிக இலகுவான வெற்றியை பதிவுசெய்தது.

அவுஸ்திரேலிய அணியானது நேற்றைய ஆட்டநேர நிறைவில் 313 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளை இழந்த நிலையில் நேற்று களமிறங்கியதுடன், தங்களுடைய கடைசி 2 விக்கெட்டுகளையும் 8 ஓட்டங்களுக்குள் இழந்தது.

இதன்காரணமாக 321 ஓட்டங்களுக்கு தங்களுடைய அனைத்து விக்கெட்டுகளையும் இழந்த அவுஸ்திரேலிய அணியானது 109 ஓட்டங்களால் முன்னிலைப்பெற்றுக்கொண்டது. அவுஸ்திரேலிய அணிசார்பில் அதிகபட்சமாக கிரிஸ் கிரீன் 77 ஓட்டங்களையும், உஸ்மான் கவாஜா 71 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பந்துவீச்சில் ரமேஷ் மெண்டிஸ் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

அவுஸ்திரேலிய அணியின் ஓட்ட முன்னிலையை வேகமாக கடப்பதற்கு முற்பட்ட இலங்கை அணியானது ஆரம்பத்தில் மிகச்சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தியது. குறிப்பாக திமுத் கருணாரத்ன மற்றும் பெதும் நிஸ்ஸங்க ஆகியோர் வேகமாக ஓட்டங்களை குவித்தனர்.

முதல் விக்கெட் 37 ஓட்டங்களுக்கு வீழ்த்தப்பட, அதனைத்தொடர்ந்து இலங்கை அணியானது தொடர்ச்சியாக விக்கெட்டுகளை பறிகொடுக்க தொடங்கியது. குறிப்பாக வேகமாக ஓட்டங்களை குவிக்கும் முயற்சியிலிருந்த இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர்கள் தேவையில்லாத துடுப்பாட்டங்களை கையாண்டு விக்கெட்டுகளை பறிகொடுத்தனர்.



குறிப்பாக இன்றைய தினம் நெதன் லையோனின் பந்துவீச்சுக்கு மாத்திரம் அல்லாமல் பகுதிநேர சுழல் பந்துவீச்சாளரான டிராவிஷ் ஹெட்டின் பந்துவீச்சுக்கும் தடுமாறிய இலங்கை அணியானது வெறும் 22.5 ஓவர்கள் மாத்திரமே துடுப்பெடுத்தாடியதுடன், 113 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இலங்கை அணியின் துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக திமுத் கருணாரத்ன 23 ஓட்டங்களை பெற்றுக்கொள்ள, பந்துவீச்சில் நெதன் லையோன் 4 விக்கெட்டுகளையும், டிராவிஷ் ஹெட் 4 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இதில் டிராவிஷ் ஹெட் தன்னுடைய கன்னி டெஸ்ட் விக்கெட்டினை பதிவுசெய்திருந்தது மாத்திரமின்றி, 2.5 ஓவர்கள் பந்துவீசி 10 ஓட்டங்களுக்கு இந்த 4 விக்கெட்டுகளையும் கைப்பற்றியிருந்தார்.


தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்

Dialog


இலங்கை கிரிக்கெட் அணியின் டெஸ்ட் வரலாற்றை பொருத்தவரை குறைந்த பந்துகளுக்கு (137) தங்களுடைய அனைத்து விக்கெட்டுகளையும் இலங்கை அணி நேற்று இழந்து மோசமான சாதனையை பதிவுசெய்ததுடன், காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் தங்களுடைய இரண்டாவது குறைந்த ஓட்ட எண்ணிக்கையையும் நேற்று (01) பதிவுசெய்திருந்தது.

அவுஸ்திரேலிய அணிக்கு வெற்றியிலக்காக 5 ஓட்டங்கள் மாத்திரம் தேவைப்பட்ட நிலையில், ரமேஷ் மெண்டிஸின் முதல் ஓவரில் ஒரு சிக்ஸர் மற்றும் பௌண்டரியை விளாசி டேவிட் வோர்னர் போட்டியை நிறைவுசெய்தார். அதன்படி அவுஸ்திரேலிய அணி 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று, தொடரில் 1-0 என்ற முன்னிலையை பெற்றுள்ளது.

அஞ்சலோ மெத்திவ்ஸிற்கு கொவிட்19 தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில்,



அவர் அணியிலிருந்து நீக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது நாள் ஆட்டத்துக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட கொவிட்19 தொற்று பரிசோதனையில் அஞ்செலோ மெதிவ்ஸிற்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதன்காரணமாக இலங்கை அணியிலிருந்து அஞ்செலோ மெதிவ்ஸ் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அவருக்கான சிகிச்சைகள் வழங்கப்பட்டுவருவதாகவும் இலங்கை கிரிக்கெட் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

ஐசிசியின் புதிய விதிமுறையின்படி கொவிட்19 தொற்றுக்கு முகங்கொடுக்கும் வீரருக்கு பதிலாக மாற்று வீரரை அணியில் இணைக்கமுடியும்.

அதன்படி அஞ்சலோ மெத்திவ்ஸிற்கு பதிலாக பங்களாதேஷ் அணிக்கு எதிரான தொடரில் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய ஒசத பெர்னாண்டோ அணியில் இணைக்கப்பட்டார்.

சுற்றுலா அவுஸ்திரேலியா இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 8ம் திகதி காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அக்கரைப்பற்று கல்வி வலய கரப்பந்து தொடரில் பொத்துவில் அல்–இஷ்ராக் மகா வித்தியாலயம் வெற்றி

**அட்டாளைச்சேனை மத்திய நிருபர்**

அக்கரைப்பற்று கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்து சுற்றுப்போட்டிகள் 16, 18, 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான பிரிவுகளில் தனித்தனியாக நடைபெற்றன.

அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில், பொத்துவில் அல்இஷ்ராக் மகா வித்தியாலய அணி, ஒலுவில் அல்ஹம்றா மகா வித்தியாலய அணியை 3:2 புள்ளி வித்தியாசத்தில் வெற்றியீட்டி சம்பியனானது.

18 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான போட்டி அட்டாளைச்சேனை மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இப்போட்டியில், அக்கரைப்பற்று பாயிஷா மகா வித்தியாலயம்



முதலாமிடத்தையும், ஒலுவில் அல்-ஹம்றா மகா வித்தியாலயம் இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டது.

அக்கரைப்பற்று அஸ்-ஸிராஜ் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற 16 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில், ஒலுவில் அல்ஹம்றா மகா வித்தியாலயம் முதலாமிடத்தையும், அட்டாளைச்சேனை அல்அர்ஹம் வித்தியாலயம் இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டது.

அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எம். றஹ்மத்துல்லாஹ் (நழீமி) யின் ஆலோசனை, வழிகாட்டலில், அக்கரைப்பற்று கல்வி வலய உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.ஜெமீல் மற்றும் ஆசிரியர் ஆலோசகர் எம்.எச்.ஹம்மாத் ஆகியோர் போட்டிகளை வெற்றிகரமாக ஏற்பாடு செய்து நடாத்தினர். அக்கரைப்பற்று கல்வி வலயத்திற்குட்பட்ட, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, பொத்துவில் பிரதேச பாடசாலைகளின் கரப்பந்து அணிகளுக்கிடையில் நடைபெற்ற கோட்டமட்ட கரப்பந்து போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலைகள் வலயமட்ட போட்டிகளில் பங்குபற்றின.

# தம்பலகாமம் பிரதேச விளையாட்டு விழா, சம்பியனாக சென்றல் விளையாட்டு கழகம்



**முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்**

தம்பலகாமம் பிரதேச செயலகம் ஊடாக நடாத்தப்பட்ட பிரதேச மட்ட விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வு கடந்த (29) மாலை முள்ளிப்பொத்தானை பாத்திமா பாலிகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெற்றது.

குறித்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி கலந்து கொண்டு வெற்றிபெற்ற அணியினருக்கு பரிசில்களை வழங்கி வைத்தார்.

இதில் சகல துறை சம்பியனாக சென்றல் விளையாட்டு கழகம் சம்பியன் பட்டத்தை தனதாக்கினர். உதைப் பந்தாட்ட போட்டித் தொடரின் சம்பியனாக ஈச் விளையாட்டுக் கழகமும் சம்பியனாக தெரிவாகினர் இதனை தொடர்ந்து ஹமீடியா விளையாட்டு கழகமும் Runner up ஆக தெரிவாகினர். குறித்த பிரதேச மட்ட போட்டிகளில் உதைப் பந்தாட்டம், அத்திலாட்டிக் உட்பட பல விளையாட்டு போட்டித் தொடர்கள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பாலமுனையில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைப்பு



**பாலமுனை தினகரன் நிருபர்**

பாலமுனை விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.தொழிலதிபரும், மு.கா.பாலமுனை மத்திய கழு அமைப்பாளருமான ஏ.எல்.எம். அலியார் தலைமையிலான குழுவினர் இப் பிரதேசத்தின் முன்னோடி கழகங்களான திரி ஸ்டார், அல் அரபா, சுப்பர் ஒக்கீட், அல் ஹுசனியா, மின்ஹாஜ் பாடசாலை கழகம், போன்ற விளையாட்டு கழகங்களுக்கே மேற்படி எல்லே விளையாட்டுக்கான துடுப்புக்கள் வழங்கி வைக்கப்பட்டன

ஹுசைனியா விளையாட்டு கழகத்தின் தலைவர் சம்சுல் மக்கீன் இல்லத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஐ.எல்.எம்.பாயிஸ்,கழகங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்

# பலாங்கொடை ஜெய்லானி தேசிய பாடசாலை மாகாண போட்டிக்கு தெரிவு



**பலாங்கொடை தினகரன் நிருபர்**

பலாங்கொடை கல்வி வலைய பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்ட சுற்றுப்போட்டி அண்மையில் பலாங்கொடை நகர சபை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

பலாங்கொடை கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளின் 16 வயதுக்கு கீழ்ப்பட்ட ஏழு கால்பந்தாட்ட அணிகள் பங்கு கொண்டன. 'நொக் கவுட்' தொடரில் இறுதிப் போட்டி வரை சிறப்பாக முன்னேறிய பலாங்கொடைஜெய்லானிதேசியபாடசாலையின் கால்பந்தாட்ட அணியினர் ஒப்பநாயக்க வித்யாகர வித்தியாலயத்துடன் விளையாடி 3-0 என்ற கோல் அடிப்படையில் வலயமட்ட சம்பியனாக ஜெய்லானி தேசிய பாடசாலை தெரிவுசெய்யப்பட்டு எதிர்வரும் மாகாண போட்டிகளுக்கு தகுதி பெற்றுள்ளது.

அதேவேளை 20 வயதுக்கு கீழ்ப்பட்ட பலாங்கொடை ஜெய்லானி தேசிய பாடசாலை அணியினர் மூன்றாவது இடத்தை பெற்று மாகாண மட்ட போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. இந்த காற் பந்தாட்ட அணிகளை சிறப்பாக வழி நடாத்திய பாடசாலை விளையாட்டு கழக தலைமை ஆசிரியர் எம்.டி.எம். ரூமி அவர்களின் தலைமையின் கீழ் சிறப்பாக பயிற்சி அளித்த பாடசாலை காற்பந்து பயிற்றுவிப்பாளர் எம். எம். ஸஹாஸ்அஹமட் பணியாற்றிய மை குறிப்பிடத்தக்கது.

# சிறுவர்களுக்கான மெய்வல்லுநர் போட்டி



**ஓமந்தை விஷேட நிருபர்**

முல்லைத்தீவு குமுழமுனை தாமரைக்கேணி சிறுவர் முன்பள்ளியில் சிறுவர்களுக்கான இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம் பெற்றது.

குமுளமுனை கிழக்கு தாமரைக் கேணி முரளி முன்பள்ளியில் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் ஆரம்பமாகி சிறப்பாக நடை பெற்றிருந்தது. இப் போட்டியில் நீர் நிரப்பல் ,பழம் பொறுக்குதல், நிறம்தெரிதல், ஓட்டம், வினோத உடை போன்ற நிகழ்வுகளில் பங்கு பற்றி வெற்றியீட்டிய சிறார்களுக்கு பரிசு பொதிகள் வழங்கி வைக்கப் பட்டன.

முரளி முன்பள்ளி நிர்வாக தலைவர் சி.சுரேஷ் தலைமையில் ஆரம்பமாகிய மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக போதகர் இராதகிருஷ்ணன், குடும்பநல உத்தியோகத்தர் சு.சிவகுமாரி முன்பள்ளி ஆசிரியர்கள் மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிட தக்கது.